FRIENDS MISSIONARY PRAYER BAND
YOUTH & TEENS WING

# கேரீக்ஸ்

youth wing

A monthly Prayer Bulletin for Youth & Teens

Vol 14 - Transmit - 12 December 2021

## ஆகமங்களில்

# கிறிஸ்மஸ்

## 12 கோத்திரங்கள்




Private circulation only

# ப்ரெட்ரிக் ஜாக் பிலிப்ஸ்


**ப்ரெட்ரிக் ஜாக் (ப்ரிட்ஸ்) பிலிப்ஸ்**
**சேர்மேன், பிலிப்ஸ்**
**பிறப்பு: எயிந்தோவன், 1905, ஹாலந்து**

ப்ரெட்ரிக் என்ற ப்ரிட்ஸ் (பிறப்பு 16 ஏப்ரல் 1905-இறப்பு 5 டிசம்பர் 2005) எல்லோராலும் நேசிக்கப்பட்ட பிலிப்ஸ் கம்பெனியின் சேர்மனாக செயல் பட்டார். பிலிப்ஸ் கம்பெனி அவருடைய அப்பாவாலும், மாமாவாலும் சேர்ந்து நிறுவப்பட்டது. 1923ஆம் ஆண்டு, ப்ரிட்ஸ் தன்னுடைய பட்டப்படிப்பை டெல்ட் பல் கலைக்கழகத்தில் துவங்கி 1929 ஆம் ஆண்டு பொறியியல் பட்டம் பெற்றார். அவர் 1934ஆம் ஆண்டு ஆஸ்போர்டு குழுவில் சேர்ந்து சுவிசேஷக் கூட்டங்களிலும் விவாதங்களிலும் கலந்து கொண்டார். அவர் கிறிஸ்து சிந்தையோடு செயல் பட்டதால் சகப்பணியாளர்களை அன்போடும் பரிவோடும் நடத்தினார். சாதாரண தொழிலாளி முதல் இயக்குனர்கள் வரை அனைவரையும் சமமாய் நடத்தினார். ஆகவே அவரை மிஸ்டர் ப்ரிட்ஸ் என்று அனைவரும் அழைத்தனர்.

ஹிட்லர் தலைமையில் மே மாதம் 1940ஆம் ஆண்டு ஜெர்மனி ஹாலந்து நாட்டின் மீது படையெடுத்த போது, இதனை ப்ரிட்ஸ் தவிர்த்து பிரச்சனைகளை சந்திக்காமல் இருந்திருக்கலாம். அவருடைய தந்தையும் பிற குடும்பத்தினரும் ஹாலந்து நாட்டைவிட்டு அமெரிக்கா சென்றனர். செல்லும் போது நிறுவனத்தின் பணங்களையும் சேர்ந்து எடுத்துச் சென்றனர். ஆனால் ப்ரிட்ஸ் அவர்களோடு செல்லாமல் தன் பணியாளர்களுக்காகவும், நாட்டுக்காகவும் தங்கி சவாலை சந்தி க்க முற்பட்டார். ஹிட்லரின் சர்வாதிகாரமான முயற்சிகளையும் தன்னால் இயன்ற அளவு தடுக்க முடிவு செய்தார்.

இதனாலேயே 30மே முதல் 20 செப்டம்பர் 1943 வரை அவர் ஹிட்லரின் படைகளால் சிறையில் அடைக்கப்பட்டார். ஹிட்லரின் கொடுங்கோல் ஆட்சியில் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட சூழலில், ப்ரிட்ஸ் 382 யூதர்களை காப்பாற்றினார். கொல்லப்படுவதாக பிடிக்கப்பட்ட யூதர்களை அவர்கள் பிலிப்ஸ் கம்பெனிக்கு அவசியம் என்று கூறி அவர்களை பணியில் அமர்த்தி காப்பாற்றினார். இந்த செயலை 1996ல் இஸ்ரவேல் நாட்டில் தேசங்களுக்குள் நீதியுள்ளவன் என்ற பட்டமளித்து ப்ரிட்ஸை கவுரப்படுத்தினார்கள். 1961 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு பில்ப்ஸ் நிறுவனத்தின் தலைவராக ப்ரிட்ஸ் செயல்பட்டார். கலர் டி.வி பெட்டிகளை அறிமுகப்படுத்தியதால் அவர்களுடைய வருமானம் மூன்றுமடங்கு பெருகியது. ப்ரிட்ஸ் எல்லாவித சாதனங்களையும் சிறந்த ஆய்வு செய்த பின்பே வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆகவேதான் பிலிப்ஸ் நிறுவனம் முதல் கேசட் டேப்ரிக்கார்டர் அறிமுகப்படுத்தி யது. பின்னர் முதல் சிடி பிளேயருக்கான பணியும் இவருடைய தலைமையில் துவங்கப்பட்டது. 1999ஆம் ஆண்டு இவருக்கு ஹாலந்தின் நூற்றாண்டின் சிறந்த தொழிலதிபர் என்ற பட்டமும் கொடுக்கப்பட்டது.

## ப்ரிட்ஸ் பிலிப்ஸினிடமிருந்து நாம் கற்கும் பாடங்கள் என்ன?



**விசுவாசமும் துணிவும்:** ப்ரிட்ஸ் தன் விசுவாசத்தை வாழ்ந்து காட்டினார். நாட்டிலேயே தங்கியிருந்து எதி ரிகளை எதிர்கொள்வது முட்டாளதை என்று கருதப்பட்டது. ஆனாலும் ப்ரிட்ஸ் துணிந்து செயல்பட்டு ஒரு சாட்சியாக விளங்கி, மக்கள் மத்தி யிலும் நற்பெயர் பெற்றார்.

**குடும்ப ஐக்கியம்:** விசுவாசத்திற்கு பின் ப்ரிட்ஸ் குடும்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். குடும்ப வாழ்விலும் ப்ரிட்ஸ் கிறிஸ்தவ அன்பை பிரதிபலித்து குடும்பமாக தேவனை சேவித்தனர். அவருடைய குடும்பமும் ப்ரிட்ஸோடு சேர்ந்து சிறைச்சாலை சென்று அவருடைய பாடுகளை பகிர்ந்தனர்.

**தாராளகுணம்:** தன்னுடைய பணம், நேரம் மற்றும் அறிவுரைகளிலும் தாராளமாய் இருந்தார். பிறருடைய நலனுக்காக ப்ரிட்ஸ் பணத்தையும், நேரத்தையும் செலவழித்தார். தான் வாழ்ந்த நகரத்தின் மேம்பாட்டிற்கென பல பணிகளை செய்தார். ஏழ்மையை ஒழிக்கவும் தாராளமாய் கொடுத்தார்.

**சமூக சேவை:** ப்ரிட்ஸ் மக்களின் தேவைகளை உணர்ந்து தன்னால் இயன்ற அளவு சேவை செய்தார். முக்கியமாக கல்வி க்காக பல திட்டங்களை வகுத்தார். தன் நாட்டுமக்கள் சிறந்த கல்வி பெற வேண்டும் என்று பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பயிற்சி மையங்களையும் திறந்து வைத்தார்.

**பிறரை நேசிப்பது:** வேதம் கூறுவது போல் ஒவ்வொரு மனிதனும் தேவனின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை உணர்ந்து அனைவரையும் மதித்து நடத்தினார். ஒவ்வொரு தொழிலாளியின் திறனையும் தாலந்தையும் வெளியில் கொண்டுவர தன்னால் இயன்றதைக் செய்தார். இதனால்தான் ஹாலந்து மக்கள் இன்றும் இவரை நினைவு கூறுகிறார்கள்.

ப்ரிட்ஸ் பிலிப்ஸின் உக்கிராணத்துவ மான வாழ்க்கை நம் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு, இன்றைய தினம் பிலிப்ஸ் நிறுவனம் 80,000 தொழிலாளிகளைக் கொண்டு 100 தேசங்களில் 2.5 பில்லியன் வாழ்க்கையை மேம்படுத்த முயல்கிறது. ஆண்டவரை பற்றிக்கொண்டு, அவருடைய சித்தத்தை அன்றாடம் அறிந்து உலகத்தையே தேவனுக்காய் மாற்ற துணிவோடு செயல்பட நாம் ஆயத்தமா?

Bro.Vinod Solomon



## கேரீத்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும்
வாலிபர் மற்றும் இளம் வாலிபர்களுக்கான
மாத இதழ்

## தரிசனம்

இந்தியாவின் எதிர்கால தூண்களாகிய
இளைஞர்கள் உள்ளத்தில் பரம மன்னாவை
விதைத்திடவும், சிந்தனைக் கூர் கொண்டு
இந்தியாவை மீட்திட துடிக்கும்
இளைஞர்களுக்கான ஓர் இறை படைப்பு.

## நோக்கம்

வாலிபர் – இளம் வாலிபர்
ஜெபக்குழுக்களை வலுப்படுத்தும் மாத இதழ்

## தயாரிப்பு & வடிவமைப்பு

வாலிபர் மற்றும் இளம் வாலிபர் பிரிவு

FMPB YOUTH & TEENS WING
HEAD QUARTERS
29,High School Road
Ambattur,Chennai-53
Ph :044-26570404 Extn.256

Fmpb youth wing

சந்தா மற்றும் முகவரி
மாற்றத்திற்குக் கூப்பிடுங்க

Cell : 9841973060
9841973020


## ஜெபக்குழுத் தலைவர்களுக்கு...

ஜெபக்குழுவில் நீங்கள்
தியானிப்பதற்காகவும் ஜெபிப்பதற்காகவும்
கேரீத் இதழின் செய்திகளும்
ஜெபக்குறிப்புகளும் நான்கு வாரங்களாகப்
பிரித்து கொடுத்துள்ளோம்.
இப்புத்தகத்தின் ஏனைய பகுதிகளை
உங்கள் ஜெபக்குழுவிற்கு வரும்
வாலிபர்களுக்கு படிக்கக் கொடுக்கலாம்.
ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை
மாதம் ஒருமுறை சந்திப்போம்.
பயன்படுத்துங்கள், ஜெபக்குழுவை
வலுப்படுத்துங்கள்...


தொடர் ஜெபத்திற்கு

**அறைகூவல்**
மாத இதழ் பயன்படுத்தவும்



Nellai - Youth wing
9, Rhenius Street
Palayamkottai
Tirunelveli - 627002
Cell : 9003251982

Chennai - Youth wing,
90/86 Basanthi Devi Aparts,
Kothaval Chavadi St
Saidapet, Chennai -15
Cell : 9841032224

www.fmpbyouth.org
Kerithmagazine@fmpb.org



தனிப்பிரதி ரூ.25/-
ஆண்டு சந்தா ரூ.250/-


# EDITORIAL

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான கேரீத் அன்பர்களுக்கு அன்பின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு 2022 வாழ்த்துக்கள்.

டிசம்பர் பிறந்து, குளிர்காற்று நம்முடைய கன்னங்களை வருடும் போது, இதோ, இன்னும் ஒரு கிறிஸ்துமஸ் வந்துவிட்டது , என நினைவுகூறுகிறோம். இதை இப்படிச் செய்ய வேண்டும், அதை அப்படிச் செய்யக் கூடாது என மூளையை கலக்க ஆரம்பிக்கிறோம். இந்த சந்தோஷ அங்கலாய்ப்பின் நடுவில் என்றைக்காவது ஏன் கிறிஸ்துமஸ் என வியந்ததுண்டா?

வானங்களும், பூமியும் படைக்கப்பட்ட வரலாற்றோடு வேதாகமம் துவங்குகிறது. கடவுள் எப்படி கீழே பூமியிலுள்ளவைகளையும், மேலே ஆகாயத்திலுள்ளவைகளையும் படைத்தார் என விவரிக்கிறது. அதிலும் முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி அதிக துல்லியமான விபரங்களைத் தருகிறது. ஏன்? மனிதன் தான் கடவுளின் சிருஷ்டிப்புகளுள் மகுடமாயிருக்கிறான். தாவீது இப்படியாக எழுதி வைத்தார், உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்றேன். நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் (சங் 8:3-6). ஆனால், துயர கரமாக இந்த மகிழ்ச்சியான நிலை வெகுகாலம் நீடிக்கவில்லை.

தேவனோ தன்னுடைய முதன்மைப் படைப்பாகிய மனிதர்களை இன்னும் நேசித்தார். எனவே அவர்களை பாவத்திலிருந்தும், அழிவிலிருந்தும், நரகம் எனும் நித்திய வேதனையிலிருந்தும் மீட்டெடுக்க ஒரு பிரத்தியேக வழியை ஏற்படுத்தினார். ஆதாம் பாவம் செய்த அதே நாளிலே, சாத்தானையும் அவனது சகாக்களையும் வலிமையற்றவராக்கவும், மனிதனை பாவத்திலிருந்தும் நித்திய அழிவிலிருந்தும் மீட்கவும் ஒரு இரட்சகரை அனுப்ப கடவுள் வாக்குபண்ணினார் (ஆதி 3:15). அதன்பின் அந்த வாக்குத்தத்தின் அடுத்த அம்சமாக அந்த இரட்சகர் சமாதானம்பண்ணும் ஒரு குழந்தையாக பிறப்பார் எனவும், பாவத்திற்கு எதிரான தேவக்கோபத்தைத் தணித்து, தனக்கும் மனிதர்களுக்கும் இடையே சமாதானத்தை உண்டுபண்ணுவார் எனவும் வாக்குரைத்தார் (ஏசா 9:6-7).

இந்த வாக்குத்தத்தமே திருத்துவத்தின் இரண்டாவது நபரான இயேசுவை தனது தெய்வீக அதிகாரங்களை எல்லாம் விலக்கி விட்டு, மனிதனாக மாறத் தூண்டிற்று. அப்படியே அவர் அந்த சிறப்பான முதல் கிறிஸ்துமஸ் திருநாளிலே பெத்தலகேமிலே ஏழை பாலகனாய் மரியாளிடம் பிறந்தார். அவர் பாவமின்றி வாழ்ந்தார். முடிவிலே மனுகுலத்தின் பாவத்திற்கு தண்டனையாக தன்னையே சிலுவையில் பலியாக தந்தருளினார் (2 கொரி 5:21). இப்படி பாவங்களை தண்டித்த கடவுள் தன்னை நீதிபரர் என காண்பித்தார். ஆகையினால், அவர் இப்போது தன் பாவங்களை அறிக்கை செய்து, பாவவாழ்க்கையிலிருந்து மனந்திரும்ப வாக்குசெய்வோர் அனைவரது பாவங்களையும் மன்னித்து தனது கிருபையை வெளிப்படுத்துகிறார்.

தேவ திட்டத்தில் இந்த சமாதான குழந்தையாக இயேசு கிறிஸ்து பிறந்து வந்ததை ஆகமங்களிலிருந்து,விசேமாக 12 கோத்திரத்திலேயிருந்து வந்ததை தியானிக்க இந்த மாதம் கேரீத் உங்களுக்கு உதவும் என் நம்புகிறோம்.கிறிஸ்து இயேசுவை பழைய எற்பாட்டின் நிறைவேறுதலாக உள்ள வசனங்களை குறிப்பெடுத்து தியானிக்க அழைக்கிறோம்.இந்த கிறிஸ்மஸ் நாட்களில் இவ்வுலகில் சமாதானத்தை கொடுக்க வந்த குழந்தை இயேசுவாக மட்டுமல்ல வரப்போகிற மேசியா, இராஜாதி ராஜாவாக வரப்போகிறார்.அதற்காக நாமும் ஆயத்தமாவோம் மற்றவரையும் ஆயத்தபடுத்த இந்த கிறிஸ்துமஸ் காலங்களை கருத்தோடு கொண்டாடுவோம்.கிறிஸ்மஸ் மரத்தின் அடியில் உள்ள பரிசுகளை அல்ல சிலுவை மரத்தின் மேல் நம்முடைய வாழ்வில் சமாதனத்தை உண்டுபண்ண பிறந்த இயேசு கிறிஸ்துவையே பரிசாக்குவோம்.

இயேசு கிறிஸ்துவின் பணியில்
V .செல்வின்

# யெகோவா செலேக்

கர்த்தருடைய வல்லமையான நாமங்களை குறித்து தியானித்து வருகின்றோம். சங்கீதம்16:5ல் சங்கீதக்காரன் சொல்லும் பொழுது, கர்த்தர் என் சுதந்திரம் என்று பார்க்கிறோம். இது கர்த்தருக்கு கொடுக்கப்பட்ட பெயராகும். இந்த பெயர் எபிரேய மொழியிலே யெகோவா செலேக் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தி லும் இந்த நாமத்தை குறித்து நாம் சற்று தியானிப்போம்.

சங் 16:5,6 – கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தி யான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு.

சங் 119:57 – கர்த்தாவே, நீரே என் பங்கு; நான் உமது வசனங்களைக் கைக்கொள்ளுவேன் என்றேன்.

தாவீது திரும்ப திரும்ப கர்த்தரே என் சுதந்திரம், கர்த்தரே என் பங்கு என்று சொல்லுகிறார். சுதந்திரம் என்றால் சொத்து என்பதாகும். அதாவது பெற்றோர் பிள்ளைகளுக்கு நிலம், வீடு, செல் வங்கள் எல்லாம் சேர்த்து வைத்து தன் வயது முதிர்ந்த காலத்தில் அவற்றை பிள்ளைகளுக்கு பிரித்து கொடுப்பார்கள். ஆனால் இவையெல்லாம் நிரந்தர மானது அல்ல, அழியக்கூடியதும் கலப்படம் நிறைந்ததுமாயிருக்கிறது. அழியாததும், நிரந்தரமானது மான தேவனையே தாவீது என் சுதந்திரம், என் பங்கு என்கிறார். தாவீது ராஜாவாக இருந்து உலக பிரகாரமான ஆசீர்வாதங்கள் எல் லாற்றையும் பெற்றிருந்தாலும் அவருக்கு தெரியும் எல்லாவற்றைக்காட்டிலும் மேலானவர் கர்த்தர் ஒருவரே என்று அவரை பற்றி அறிந்ததினால்தான் கர்த்தரே என் சுதந்திரம், கர்த்தரே என் பங்கு என்கிறார்.

இஸ்ரவேலர் கானானை சுதந்தி ரித்த போது யோசுவாவின் மூலம் தேவன் அதை இஸ்ரவேல் கோத்திரங்களுக்கு பங்கிட்டு கொடுத்தார். அவ்வாறு பங்கிட்டு கொடுக்கும் பொழுது லேவி கோத்திரத்திற்கு மட்டும் பங்கு கொடுக்கப்படவில்லை. ஏனெனில் கர்த்தரே அவர்கள் பங்காயிருந்தார்.

எண் 18:20ல் பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி, அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ள வேண்டாம். அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம் இஸ்ரவேல் புத்திரர் நடுவில் "நானே உன் பங்கும் உன் சுதந்தரருமாய் இருக்கிறேன்" என்று பார்க்கிறோம்.

ஆம் நாம் அவருடைய சுதந்திரம். நமக்கு அவரே சுதந்திரம். அப்பா பிதாவே என்று கூப்பிடக்கூடிய உரிமையை நமக்கு கொடுத்தி ருக்கிறார். நமக்காக அவர் என்னென்ன சொத்துக்களை வைத்திருக்கிறார் என்று பார்ப்போம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும், அவர் அருளிய வேதாகமும், ஆரோக்கியமான விசுவாசமும், பரிசுத்த ஜீவியமும், ஆவியின் வரங்களும், கனிகளும், இனி நாம் சுதந்தரிக்க போகிற நித்திய வீடுமே நமக்கு சொத்தாக உள்ளது. அந்த சொத்துகளை சுதந்தரித்துக்கொள்ளவே நாம் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம். நாம் பாக்கியமுள்ளவர்கள். இப்படிப்பட்ட விலையேறப்பெற்ற அழியாத உன்னத மான சுதந்திரத்தை அடைவதற்கே பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் "ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும், இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்தி ற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதி யாகும்படிக்கும், அவருக்காக எல் லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்"என்று பிலி 3:7-11 -ல் பார்க்கிறோம்.

இந்த உலகத்தில் நம க்கு எவ்வளவுதான் மேன்மைகள் இருந்தாலும் அவர்தான் எல்லாம் என்று நாம் அவரையே பற்றிக் கொள்ள வேண்டும். எனவே நீரே என் தேவன், நீரே என் நம்பிக்கை , நீரே என் துணை, நீரே என் நோக்கம், நீரே என் அடைக்கலம், நீரே என் பிதா, நீரே என் கன்மலை, நீரே என் கோட்டை, நீரே என் பங்கு என்று அவரையே சுதந்திரமாக கொள்ள வேண்டும். நம்மை சுற்றிலும் இந்த விலையேறப்பெற்ற மாசில்லாத, மாறாத ஒருபோதும் கைவிடாத இந்த சுதந்திரத்தை அறியாத மக்கள் அநேகர் உண்டு.பாவத்திலும், வியாதியிலும் வறுமையிலும் சிக்கி தவிப்பவர்களுக்கு இந்த மேலான நம்பிக்கையின் தேவனை பற்றிக் கூறுவது நம் கடமையாகும்.

அவருடைய பிள்ளைகளாகும் போது, அவருடைய சுதந்திரத்தில் நமக்கு பங்கு மாத்திரம் அல்ல. அவரே நமக்கு சுதந்திரமாக மாறுவார். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களாலும் மாத்திரம் அல்ல, மறுமைக்குரிய ஆசீர்வாதங்களாலும் அவர் நம்மை ஆசீர்வதிப்பார் ஆமென்.



உபாகமம் புத்தகத்தில் இஸ்ரவேலருக்கு மோசே அளித்த பிரிவுரையில் அனைவரும் மறக்கக்கூடாத பல முக்கியக் காரியங்களை அவர் குறிப்பிட்டுள்ளார். ஆண்டின் கடைசி மாதத்தில் வந்திருக்கும் நாம் அவைகளைத் தியானிப்பது நலமாயிருக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

### முந்தய நிலையை மறந்து போகாதே:

நீ எகிப்து நாட்டில் அடிமையாயிருந்ததையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னை மீட்டுக் கொண்டதையும் நினைவிற்கொள் (உபா 15:12-15; 16:10-12; 24:17,18,21,22). நமது கடந்த காலப் பாவ வாழ்வின் ஆழத்தையும் தேவனது மீட்பின் அன்பின் உயரத்தையும் நினைத்து உணரும் அளவைப் பொறுத்தே நமது இன்றைய வாழ்வின் தரம் அமையும் (லூக் 7:36-47) என்பதை மறந்து போக வேண்டாம்.

### வாக்குத்தத்தங்களை மறந்து போகாதே:

உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடு பண்ணின உடன்படிக்கையை மறந்து போகாதபடி எச்சரிக்கையாயிருங்கள் (உபா 4:23). இந்த ஆண்டிலும் இதற்கு முன்பும் அனுதின தியானத்திலும், கூட்டங்களிலும் பெற்றுக்கொண்ட வாக்குத்தத்தங்களை நினைவுப்படுத்தி, உரிமைபாராட்டி தேவனிடம் மன்றாட மறந்து போகவேண்டாம். (யோவா 12:14-16; லூக் 24:6-8, அப் 11:15,16)

### கற்றுக்கொண்டவைகளை மறந்து போகாதே:

இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும், நியாயங்களையும் பெற்றிருக்கும் வேறே பெரிய மக்களினம் யார்? நீ மறவாதபடிக்கு ... காத்துக் கொள் (உபா 4: 8-10). எவரையும்விட அதிகமாய் பிரசங்கங்களைக் கேட்டிருக்கும் இத்தலைமுறை கிறிஸ்தவர்களாகிய நாம் தாவீது போல், நான் உமது வார்த்தையை மறவேன் என்று சாட்சியிட மறந்து போக வேண்டாம்.

### அதிசயங்களை மறந்துபோகாதே:

உன் கண்கள் கண்ட பெரிய சோதனையையும்... அற்புதங்களையும் நினைத்திரு உபா 7:19; 25:17-19ஐ வாசியுங்கள். சீடரின் விசுவாசத்தை உயிர்ப்பிக்க இயேசு பன்னிரண்டு கூடை, ஏழு கூடை அப்பங்களின் அதிசயத்தை செய்தார். (மத் 16:9-10). தேவனது நேற்றைய அற்புதங்களை மறப்பது, இன்றையத் தேவையில் அவரை மட்டுப்படுத்துவதாகும். உன் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் தேவன் செய்த அதிசயமான காரியங்களை மறந்து போக வேண்டாம்.

### கடவுளைக் கோபமூட்டியதை மறந்து போகாதே:

நீ வனாந்திரத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்குக் கடுங்கோபம் உண்டாக்கியதை நினை, அதை மறவாயாக (உபா 9:7,24). ஓரேப், தபோரா, மாசா, கிப்ரோத் மறுபடியும் நம் வாழ்வில் நிகழாதபடி அச்சம்பவங்களை நினைவிற்கொள்ள தேவன் விரும்புகிறார் (உபா 9:8,22: 24:9; 8:2-5). எனவே தேவனை கோபமூட்டாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்பதை மறந்து போக வேண்டாம்

### ஆசீர்வாதக்காரணரை மறந்துபோகாதே:

நீ சாப்பிட்டுத் திருப்தியாகும்போது கர்த்தரை மறவாதபடி எச்சரிக்கையாயிரு (உபா 6:10-12). ஆசீர்வாதங்களை விக்கிரகங்களாக்கிவிடக் கூடாது. ஆட்டுக்குட்டியானவரே அங்கு எல்லாம் (வெளி 21:22,23). தேவனையே எப்பொழுதும் எல்லாவற்றிலும் நினைவுகூரும்போது பரலோகைப் பூவுலகில் அனுபவிக்க முடியும். எனவே தேவன் நமக்கு இதுவரைக் கொடுத்த ஆசீர்வாதங்களை மறந்து போக வேண்டாம்.

### மறந்திடாதே நீ மன்னவன் இயேசுவின் மாண்பினை கூற மறந்து போகாதே:

கொரோனா என்ற கொடிய கொள்ளையின் உச்சத்திலும், சுற்று சூழலில் வந்த இயற்கையின் சீற்றத்திலும் நம்மை பாதுகாத்த அவரது அன்பினை மறந்திடாமல் இருந்திடவும், மறந்திடாமல் பறைசாற்றவும் கடமைப்பட்டிருக்கிறோம். ஆகவே இந்த கொடிய நாட்களை தாண்டி வந்திருக்கிற நாம் எந்த நோக்கத்திற்காக உயிரோடு வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து செயல்பட அழைக்கிறார். அவரையும் அவருடைய வார்த்தைகளையும் மறவாமல் பின்பற்றுவோம். அவர் வருகை சமீபமானதால் அநேகரை நீதிக்குட்படுத்தும் பணியில் மறவாது செயல்படுவோம்.

அவர் செய்த சகல
உபகாரங்களையும்
மறவாதே (சங் 103:2)









முதலாவது வார செய்தி

# கிறிஸ்துவின் பிறப்பில் 12 கோத்திரங்கள்

இந்த வருடம் முழுவதும் தோராவை மைய மாக கொண்டு மாதங்களின் வரிசை அடிப்படையில் அதே எண்ணோடு தொடர்புடைய சத்தியத்தை தோராவிலிருந்து கற்றுக்கொள்ள தேவன் நமக்கு கிருபை செய்தார். இந்த பன்னிரெண்டாம் மாதமும் இஸ்ரவேலின் 12 கோத்திரப்பிதாக்களை கற்றுக்கொள்ள தேவன் நமக்கு கிருபை செய்வாராக. நம்மில் அநேகர் வேதப்புத்தகங்களை மனனம் செய்கிறோம். சீஷர்களின் பெயர்களை மனனம் செய்கிறோம். ஆவியின் கனிகளை மனனம் செய்கிறோம். அதே போல் இஸ்ரவேலின் 12 கோத்திரப்பிதாக்களையும் வரிசையாக சொல்லுவது நல்லது. ஆதியாகமத்தின் கடைசி பகுதியிலிருந்து அதாவது முற்பிதாக்களின் காலம் துவங்கி வேதத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்துதல் வரை இந்த 12 கோத்திரப்பிதாக்களை நாம் காண முடிகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் இந்த ஒரு குடும்பத்தின் 12 பிள்ளைகளை வைத்துதான் முழு வேதாகமும் பயணிக்கிறது. தேவனின் இரட்சிப்பின் திட்டமும், இந்த ஒரு குடும்பத்தை மையமாக கொண்டே வருகிறது என்றால் அது மிகையாகாது. இஸ்ரவேல் ஜனங்கள் மொத்தமாக குறிப்பிடப்படும் இந்த ஒரு வார்த்தையில் ஒரு குடும்பம் தான் அடங்கியிருக்கும். இதை நியாயாதிபதிகளின் காலங்களிலும், ராஜாக்களின் காலங்களிலும், சுவிசே காலங்களிலும், சபையின் காலங்களிலும், பரிணமிக்கு மின் காலத்திலும் பவுல் நான் பென்யமீன் கோத்திரத்தான் என்று சொல்லுவதை குறிப்பிடுவது வரை இந்த ஒரு குடும்பத்தின் மையமாகவே வேதசரித்திரம் பயணிக்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்த மாதம் நான்கு வாரங்களிலும் யாக்கோபின் புத்திரர்களை நாம் படிக்கும் பொழுது, ஒவ்வொரு வாரத்தி லும் அவர்களுடைய தாய் பிள்ளைகள் வரிசையில் படிப்போம். குறிப்பாக இந்த வாரம், லேயாளின் பிள்ளைகளாகிய ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய கோத்திரப்பிதாக்களை பற்றி அறிவோம்.

கோத்திரப்பிதாக்களை படிக்கும்பொழுது, அந்த பெயருக்கான அர்த்தம் தாய் இட்ட பெயர், யாக்கோபின் ஆசீர்வாதம், மோசேயின் தீர்க்க தரிசனம் என நான்கு கோணங்களின் அடிப்படையில் கற்றுக்கொள்ள வேண்டும். கோத்திரங்களை வரிசைப்படுத்துதல் என்பது அல்லது விடுபட்ட கோத்திரங்களின் பெயர்கள் என நாம் நியாயாதிபதி கள், தீர்க்கதரிசன காலங்கள் மேலும் வெளிப்படுத்துதலின் தரிசனம் இவைகளில் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருந்தாலும், அவைகள் அனைத்தும் நான்கு அர்த்தங்கள் கொண்டவை இதற்கான காரணத்தை இனி வரும் நாட்களில் ஆழமாக கற்றுக்கொள்ள முயற்சி செய்வோம்.

## ரூபன்




இப்பொழுது ரூபன் பிறப்பின் வரிசையில் யாக்கோபின் முதல் மகன்:

ரூபன் என்ற வார்த்தைக்கு எபிரேய அர்த்தம் காண்பது மற்றும் மகன் . ரூபனின் பிறப்பு ஆதி29:31-32 லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்; ராகேலோ மலடியாயிருந்தாள். லேயாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று; கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புருன் என்னை நேசிப்பார் என்று சொல்லி, அவனுக்கு ரூபன் என்று பேரிட்டாள் என்று பார்க்கிறோம். இந்த பெயரின் அர்த்தத்தில் குமாரன்(இயேசு) முதற்பேறானவராக கொடுக்கப்பட வேண்டும் என்று அர்த்தம். ஆனால் இங்கு ரூபனோ அந்த சேஷ்டபுத்திரபாகத்தை தன் தகப்பன் மஞ்சத்தில் ஏறினதினால் இழந்து போனான். இப்பொழுது ரூபனை குறித்த யாக்கோபின் ஆசீர்வாதத்தையும், மோசேயின் தீர்க்க தரிசனத்தையும் பார்ப்போம்.

யாக்கோபின் ஆசீர்வாதம்:

ரூபனே, நீ என் சேஷ்டபுத்திரன்; நீ என் சத்துவமும், என் முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமு மானவன். தண்ணீரைப் போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தி னாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே (ஆதி 49:3-4).

மோசேயின் தீர்க்கதரிசனம்:

ரூபன் சாவாமல் பிழைப்பானாக; அவன் ஜனம் கொஞ்சமாயிராது என்றான் (உபா 33:6). தொடர்ந்து சிமியோனை குறித்து பார்ப்போம்.




## சிமியோன்

சிமியோன் என்ற பெயருக்கு எபிரேய சொல்லின் அர்த்தம் கேட்பதும், ஏற்றுக்கொள்வதும் ஆகும்.

சிமியோனின் பிறப்பு: (ஆதி 29:33)

மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச் சிமியோன் என்ற பேரிட்டாள். இப்பொழுது யாக்கோபின் ஆசீர்வாதத்தை பார்ப்போம்.

யாக்கோபின் ஆசீர்வாதம்: (ஆதி 49:5-7)

சிமியோனும், லேவியும், ஏகசகோதரர் அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். என் ஆத்துமாவே, அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையை, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. உக்கிரமான அவர்கள் கோபமும், கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்கள் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன். இந்த பெயருக்கான அர்த்தம் தேவ குமாரனின் நற்செய்தியை(இயேசு கிறிஸ்து) ஜனங்கள் கேட்க வேண்டும் என்பதே. தொடர்ந்து லேவி கோத்திரத்தை கற்றுகொள்ளுவோம்.




## லேவி

லேவி என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் ஒட்டிக்கொள்ளும் தன்மை அல்லது மாலை சூடுதல் . இதன் உள் அர்த்தத்தை நீ புரிந்து கொள்ள வேண்டுமென்றால் குமாரனின் சுவிசேஷமே நம்மை தேவனோடு ஒப்புரவாக்கிக் கொள்ளும். லேவியும், அந்த ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டிருந்தான். இதை 1 சாமு 2:28ல் காணலாம். என் பலிபீடத்தின் மேல் பலியிடவும், தூபங்காட்டவும், என் சமூகத்தில் ஏபோத்தைத் தரிக்கவும் இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் அவனை எனக்கு ஆசாரியனாகத் தெரிந்துகொண்டு, உன் பிதாவின் வீட்டாருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலிகளையெல்லாம் கொடுக்கவில்லையா? இப்பொழுது லேவியின் பிறப்பையும், யாக்கோபின் ஆசீர்வாதத்தையும் மற்றும் மோசேயின் தீர்க்கதரிசனத்தையும் வாசித்து நிறைவு செய்வோம்.

லேவியின் பிறப்பு: (ஆதி 29:34)

“பின்னும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று; என் புருஷனுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர் இப்பொழுது என்னோடு சேர்ந்திருப்பார் என்று சொல்லி, அவனுக்கு “லேவி” என்று பேரிட்டாள் .

யாக்கோபின் ஆசீர்வாதம்: (ஆதி 49:5-7)

“சிமியோனும், லேவியும், ஏகசகோதரர் அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள். என் ஆத்துமாவே, அவர்களுடைய ரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையை, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே. உக்கிரமான அவர்கள் கோபமும், கொடுமையான அவர்கள் மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே அவர்கள் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன் .

மோசேயின் தீர்க்கதரிசனம்: (உபா 33:8-11)

லேவியைக் குறித்து நீ மாசாவிலே பரீட்சை பார்த்து, மேரிபாவின் தண்ணீரிடத்தில் வாக்குவாதம் பண்ணின உன் பரிசுத்த புருஷன் வசமாய் உன்னுடைய தும்மீம், ஊரீம் என்பவைகள் இருப்பதாக. தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் நான் உங்களை பாரேன் என்று சொல்லி, தன் சகோதரரை அங்கீகரியாமல்; தன் பிள்ளைகளையும் அறியாமல் இருக்கிறவன் வசமாய் அவைகள் இருப்பதாக; அவர்கள் உம்முடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு உம்முடைய உடன்படிக்கையைக் காக்கிறவர்கள். அவர்கள் யாக்கோபுக்கும் உம்முடைய நியாயங்களையும், இஸ்ரவேலுக்கு உம்முடைய பிரமாணத்தையும் போதித்து, உமது சந்நிதானத்திலே தூபவர்க்கத்தையும், உமது பலிபீடத்தின் மேல் சர்வாங்க தகனபலிகளையும் இடுவார்கள். கர்த்தாவே, அவன் சம்பத்தை ஆசீர்வதித்து, அவன் கை கிரியையின் மேல் பிரியமாயிரும்; அவனைப் பகைத்து அவனுக்கு விரோதமாய் எழும்புகிறவர்கள் திரும்ப எழுந்திராதபடி அவர்களுடைய இடுப்புகளை நொறுக்கிவிடும் என்றான்.

## யூதா




யூதா யாக்கோபின் நான்காவது மகன். யூதா என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் துதித்தலும், நன்றி கூறுதலும்

யூதாவின் பிறப்பு: (ஆதி 29:35)

மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெற்று; இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா என்று பேரிட்டாள்; பிற்பாடு அவளுக்கு பிள்ளைப்பேறு நின்று போயிற்று.

யாக்கோபின் ஆசீர்வாதம்: ஆதி 49:8-12

யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே; உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள். யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள். அவன் தன் கழுதைக் குட்டியைத் திராட்சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சைச் செடியிலும் கட்டுவான்; திராட்சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப் பழங்களின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான். அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்கும்.

மோசேயின் தீர்க்கதரிசனம்:

அவன் யூதாவைக்குறித்து: கர்த்தாவின் சத்தத்தைக் கேட்டு, அவன் தன் ஜனத்தோடே திரும்பச் சேரப்பண்ணும்; அவன் கை பலக்கக்கடவது அவனுடைய சத்துருக்களுக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிற சகாயராயிருப்பீராக என்றான்.

இஸ்ரவேலின் மீது பிலேயாமின் நான்காவது ஆசீர்வாதம்: எண் 24:15-19

அவன் தன் வாக்கியத்தை எடுத்துரைத்து: பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதாவது, கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறதாவது, தேவன் அருளும் வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழவிழும்போது, கண்திறக்கப்பட்டவன்

# கிறிஸ்துவின் பிறப்பில் கோத்திரங்கள்

விளம்புகிறதாவது; அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும். ஏதோம் சுதந்தரமாகும், சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாகும்; இஸ்ரவேல் பராக்கிரமஞ்செய்யும். யாக்கோபிலிருந்து தோன்றும் ஒருவர் ஆளுகை செய்வார்; பட்டணங்களில் மீதியானவர்களை அழிப்பார் என்றான். நான்காவதாக பிறந்த இந்த யூதா சேஷ்ட புத்திர பாகத்தை பெற்றுக்கொண்டான், சிமியோனும் லேவியும் இரண்டாவது மூன்றாவதாக பிறந்தாலும் அவர்கள் கொலை செய்த பாவத்தினிமித்தம் அந்த பெரிய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள இயலாமல் போனது. இந்த பெயருக்கான அர்த்தத்தை தொடர்ந்து கவனிக்கும் பொழுது குமாரனின் செய்தியை ஏற்றுக்கொண்டு தேவனோடு இணைந்த மக்கள் எப்பொழுதும் துதித்து கொண்டிருப்பார்கள் என்று அர்த்தம். இந்த யூதா கோத்திரத்தில் தான் மேசியா பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதைக்குறித்த மேலும் ஒருசில சத்தியத்தை கடைசி வாரத்தில் தியானிப்போம்.

:




## இசக்கார்

இசக்கார் யாக்கோபின் 9-வது மகன், லேயாளுக்குப்பிறந்த 5வது மகன். இசக்கார் என்ற வார்த்தைக்கு எபிரேய அர்த்தம் வெகுமதிக்குரிய மனிதன்

### இசக்காரின் பிறப்பு (ஆதி 30:14-18):

கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான். அப்பொழுது ராகேல் லேயாளை நோக்கி: உன் குமாரனுடைய தூதாயீம் கனியில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள். அதற்கு அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது அற்பகாரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டுமோ என்றாள்; அதற்கு ராகேல்: உன் குமாரனுடைய தூதாயீம் கனிகளுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே சயனிக்கட்டும் என்றாள். சாயங்காலத்தில் யாக்கோபு வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்: என் குமாரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்டேன்; ஆகையால், நீர் என்னிடத்தில் வரவேண்டும் என்றாள்; அவன் அன்று இரவு அவளோடே சயனித்தான். தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார். அவள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள்.அப்பொழுது லேயாள்: நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத் தேவன் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்கு இசக்கார் என்று பேரிட்டாள்.

### யாக்கோபின் ஆசீர்வாதம் (ஆதி 49:14-15)

இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை. அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்.

### மோசேயின் தீர்க்கதரிசனம்( உபா 33:18-19)

செபுலோனைக்குறித்து: செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையிலும், இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையிலும் சந்தோமாயிரு. ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்; கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள் என்றான்.

இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே (1 நாளா 12:32) என்ற வார்த்தையின் மூலம் இவர்களின் தலைமைத்துவ பண்பானது தொய்வில்லாமல் தலைமுறை, தலைமுறையாக கடந்து சென்றது என்பதை அறிய முடிகிறது.




## செபுலோன்

யாக்கோபின் 10-வது மகன், லேயாளின் கடைசி மகன். செபுலோன் என்ற எபிரேய வார்த்தைக்கு குடியிருப்பு என்று அர்த்தம்.

### செபுலோனின் பிறப்பு: (ஆதி 30:19-20)

அப்புறம் லேயாள் கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஆறாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: தேவன் எனக்கு நல்ல ஈவைத் தந்தார்; என் புருஷனுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடியால், இப்பொழுது அவர் என்னுடனே வாசம்பண்ணுவார் என்று சொல்லி, அவனுக்குச் செபுலோன் என்று பேரிட்டாள்.

### யாக்கோபின் ஆசீர்வாதம் (ஆதி 49:13)

செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல் துறைமுகமாய் இருப்பான். அவன் எல்லை சீதோன் வரைக்கும் இருக்கும்.

### மோசேயின் தீர்க்கதரிசனம்(உபா 33:18-19)

செபுலோனைக்குறித்து: செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையிலும், இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையிலும் சந்தோமாயிரு. ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்; கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள் என்றான்.லேயாளின் இந்த கடைசி இரண்டு பிள்ளைகள் சொல்லும் செய்தி நாம் நமக்குரியவர்களல்ல, கிறிஸ்துவுக்குரியவர்கள். மேலும் நம்முடைய வாழ்வு நித்திய நித்தியமாய் பரலோகத்தில் உள்ளது. கிறிஸ்துவின் மூலமாக இது சாத்தியமாகிறது.

தம்பி, தங்கையே கோத்திர பிதாக்களென்றோ, யாக்கோபின் பிள்ளைகளென்றோ, இஸ்ரவேலர் என்றோ என்ன தலைப்பிட்டு படித்தாலும் மனுகுலத்திற்கான இரட்சிப்பின் மகாபெரிய திட்டத்தில் இவர்களின் பங்கு என்ன என்பதை அறிந்து தேவனை ஸ்தோத்தரிப்போம். இவர்களின் சமாதானத்திற்காக வேண்டுதல் செய்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# தினசரி கிறிஸ்மஸ்

கிறிஸ்துமஸ் என்றவுடன் நம் நினைவுக்குவருவதுகீதபவனிகளும், அலங்கார பொருட்களும், கிறிஸ்மஸ் மரங்களை நடுவதும், காலை 4 மணிக்கு ஆலயம் செல்வதும், கேக் மற்றும் திண்பண்டங்கள் மட்டுமே நினைவுக்கு வரும். ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்மஸ் என்றால் முதலில் நினைவுக்கு வருவது கிறிஸ்மஸ் பரிசேயாகும். மற்றவர்களுக்கு பரிசு பொருட்களை வாங்கித்தருவதே கிறிஸ்மஸ் என அவர்கள் கொண்டாடி வருகின்றனர். ஆனால் நம்முடைய வாழ்வில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் எப்படி இருக்கிறது. கிறிஸ்மஸ் காலங்களில் மட்டும் தான் உள்ளதா என்பதை ஆராய்ந்து பார்ப்போம். இன்றைய நாட்களில் அநேக வாலிபர்கள் தம்மிடம் இருப்பதை வைத்து சந்தோப்பபடாமல் இல்லாததை குறித்தே கவலைப்படுகின்றனர். இந்த கிறிஸ்மஸ் நாட்களில் நம்மால் இயன்ற மட்டும் எத்தனை பேருக்கு உதவி செய்ய முடியும் என திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். அப்படியானால் யாருக்குக் கொடுப்பது? எப்படி கொடுப்பது? என்பதை குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்கு தெளிவாக சொல்லுகிறது. ஆகவே அர்த்தமுள்ள வகையில் கிறிஸ்மஸை எப்படிக் கொண்டாடுவதென்று தொடர்ந்து பார்க்கலாம். முன்னணைக் காட்சியைச் சித்தரிக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்களே ஆதிகாலத்தில் பிரபலமானவை. தற்போது வாட்ஸ்ஆப்பில் ஸ்டேடஸ் மற்றும் பிக்ச்சர்ஸ் அதிக பிரபலமானவையாக உள்ளது. தமது மகன் பிறப்பதற்கு வசதியானதொரு வீட்டை அமைத்துக் கொடுப்பதைவிட இலகுவானது பிதாவானவருக்கு வேறில்லை. ஆனால் அவர் கிறிஸ்துவின் வாழ்வின் முதல் அத்தியாயத்திலிருந்தே ஏழைகளின், இல்லாதோரின் தேவன் என்று தம்மை உலகிற்குக் காட்ட விரும்பினார். சிறையிலடைக்கப்பட்ட யோவான் 'இயேசுதான் வரப்போகிற மேசியாவா' என்று குழம்பி நின்ற அவரது சீஷர்களுக்கு இயேசு சொல்லியனுப்பிய அடையாளங்களில் ஒன்று, தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது என்பதேயே மத் 11:2-5 வசனங்களில் வாசிக்கிறோம்.

வட்டத்திற்கு வெளியே எளியவரை நிறுத்தி விடும் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் ஆண்டவருக்கு முன் அர்த்தமற்றது. உணவு உடை, உறைவிட மற்றோர் இந்தியாவில் எண்ணிலடங்காதோர் உள்ளனர். எளியவர்களுக்கு நாம் செய்யும் எதுவும் கிறிஸ்துவுக்கே கொடுப்பதாகும். வேதத்தில் லூக் 16:25ல் ஆபிரகாம் ஐசுவரியவானை பார்த்து "மகனே, நீ மண்ணுலகில் உயிரோடிருக்கும் காலத்தில் உன் நல்லவைகளை அனுபவித்தாய்; லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான்; அதை நினைத்துக் கொள்" என்று கூறுகிறார். மேலும் லூக் 19: 8,9ல் சகேயுவை குறித்து பார்க்கும் போது, தனக்குள்ளதில் பாதியை எளியவருக்குக் கொடுத்துவிட முன்வந்த அதே வேளையில் இயேசு அவனுக்கு இரட்சிப்பையும் தன்னுடைய பிள்ளை என்கிற அதிகாரத்தையும் கொடுத்தார். ஆகவே கிறிஸ்மஸ் கொண்டாட்ட நாட்களில் எளியவர்களை மையப்படுத்தியும், அவர்களுக்கு உதவி செய்வதுமே நமது நினைவில் இருக்கட்டும்.


இயேசு தாம் பிறப்பதற்கு ஓர் எளிமையான இடத்தை மட்டுமல்ல, ஓர் எளிய குடும்பத்தையும் தெரிந்து கொண்டார். ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட பலியாகக் கொண்டுவரமுடியாததால் அவரது தாயார் இரு புறாக்குஞ்சுகளை மட்டும் கொண்டுவந்தார்கள் (லூக் 2:23,24; லேவி 12:2,8) என்பதை வேதத்தில் வாசிக்கிறோம். முடிவில் அவர்கள் தனது மகன் தன்னையே ஓர் ஆட்டுக்குட்டியாக பலியாக்கிடவும் இடமளித்தார்கள்.ஏழைகளை சந்தோப்படுத்த இக்கிறிஸ்துமஸ் காலத்தில் நாம் எதைத் தியாகம்பண்ணப்போகிறோம்? நம்மைச் செல்வந்தராக்க இயேசு தரித்திரரானாரே! (2கொரி 8:9).நமக்காக தரித்திரரான அவருக்காக நாம் என்ன செய்ய போகிறோம்?



கிறிஸ்துமஸ் அன்று மட்டும் கடமைக்காக கூடுதல் இட்லிகளை செய்துப் பிச்சைக்காரருக்குப் போடுவதும், சிறைவாசிகள் மற்றும் முடமானோருக்கு இனிப்புகொடுத்துத்திரும்புவதும் இந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் போதாது. அடுத்த பதினொரு மாதங்கள் எளியவர் பசியோடும், சிறைவாசிகள் பார்க்கப்படாமலும் இருக்க விட்டுவிடலாமா? கிறிஸ்துமஸ் உணர்வானது என்றும் தொடர வேண்டும். அது தினசரி அனுபவமாக வேண்டும். ஆகவே ஒவ்வொரு மாதமும் ஏழைகளுக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குங்கள். ஏழை விதவையரும், முடமானோரும், அனாதைச் சிறுவரும், நடைபாதைவாசிகளும் ஆண்டவருக்கு பிரியமானவர்கள். அவர்களின் கண்ணீரைத் துடைப்பது ஆண்டவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆகவே இந்த கிறிஸ்மஸ் நாட்களில் மட்டுமல்லாமல் அனுதினமும் எளியவருக்கு வாரி வழங்குவோம். அதுவே தினசரி கிறிஸ்மஸ் ஆகும். இக்கிறிஸ்மஸ் நாட்களில் கிள்ளி கொடுக்காமல் அள்ளிகொடுக்க பழகுவோம். ஒரு புது ஆடைக்கூட இல்லாமல் அநேகர் இருக்கையில் நாம் அளவுக்கு அதிகமான ஆடைகளை எடுக்காதிருப்போம். செல்பி உலகில் தனக்கு மட்டுமே வேண்டும் என்று தன்னலம் நாடும் மக்கள் மத்தியில் கிறிஸ்துவை தரித்தவர்களாகிய நாம் ஏழை எளியவர்களை இந்த கிறிஸ்மஸ் நாட்களில் மட்டும் நினைவுக்கொள்ளாமல் தினசரி நினைவுகூர்ந்து இயேசுவின் அன்பினை இவ்வுலகிற்கு காண்பிப்போம்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார் (லூக் 1:53).

- Mrs. Mercy Selwyn




இந்த இரண்டாம் வார செய்தியில் இருமறுமனையாட்டிகளுக்கு பிறந்த நான்கு கோத்திரப்பிதாக்களை குறித்து கடவுள் நமக்கு கற்றுத்தரும் பாடத்தை கற்போம்.

மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கு பிள்ளைகள் பிறந்தாலும் பிள்ளைகளுக்கு பேரிட்டது முற்பிதாவாகிய யாக்போபின் மனைவிமார்களே என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இவர்கள் மறுமனையாட்டிகளின் பிள்ளைகளாக இருந்தாலும் இஸ்ரவேலின் கோத்திரப்பிதாக்களாகவும் வாக்குதத்தம் பண்ணப்பட்ட பூமிக்கு சம உரிமையும் பெற்றவர்கள் இப்பொழுது நாம் தாண் புத்திரரை கற்போம்.

# தாண்




தாண் யாக்கோபின் ஐந்தாவது மகன், பில்காளின் முதலாவது மகன். தாண் என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம். "நீதி செய்தல்" அல்லது "நியாயம் தீர்த்தல்" கிறிஸ்துவின் நற்செய்தியில் தாண் சொல்லும் செய்தி, ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நியாயத்தீர்ப்புக்குட்படுவார்கள் என்பதேயாகும்.

## தாணுடைய பிறப்பு: (ஆதி 30:1-6)

ராகேல்தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறாததைக்கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேலின்மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், நான் தேவனா? என்றான். அப்பொழுது அவள்: இதோ, என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும் அவளிடத்தில் சேரும் என்று சொல்லி, அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக் கொடுத்தாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேர்ந்தான். பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ராகேல்: தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிட்டாள்.

## யாக்கோபின் ஆசீர்வாதம்: (ஆதி 49:16-18)

தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான். தாண், குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான். கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்.

## மோசேயின் தீர்க்கதரிசனம்: (உபா 33:22)

தாணை குறித்து: தாண் ஒரு பாலசிங்கம், அவன் பாசானிலிருந்து பாய்வான் என்றான் .

# நப்தலி




நப்தலி யாக்கோபின் 6வது மகன், பில்காளின் 2-வது மகன். நப்தலி என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் ம ற்போரிடுதல் இந்த பெயர் சொல்லும் நற்செய்தி விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் இவ்வுலகில் மாம்சத்தில் போராட்டம் உண்டு. இதில் அவன் போராடி வெற்றி பெற வேண்டுமென்பதே.

# கிறிஸ்துவின் பிறப்பில் கோத்திரங்கள்




**நப்தலியின் பிறப்பு: (ஆதி 30:7-8)**

மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ராகேல்; நான் மகா போராட்டமாய் என் சகோதரியோடே போராடி மேற்கொண்டேன் என்ற சொல்லி, அவனுக்கு நப்தலி என்று பேரிட்டாள்.

**யாக்கோபின் ஆசீர்வாதம்: (ஆதி 49:21):**

"நப்தலி விடுதலைபெற்ற பெண்மான்; இன்பமான வசனங்களை வசனிப்பான்".

**மோசேயின் தீர்க்கதரிசனம்: (உபா 33:23)**

"நப்தலியைக் குறித்து: நப்தலி கர்த்தருடைய தயவினாலே திருப்தியடையந்து, அவருடைய ஆசீர்வாதத்தி னாலே நிறைந்திருப்பான். நீ மேற்றிசையையும் தென்தி சையையும் சுதந்தரித்துக் கொள் என்றான் .

# காத்




காத் யாக்கோபின் 7வது மகன், சில்பாளின் முதல் மகன். காத் என்ற வார்த்தைக்கு எபிரேய அர்த்தம் அதிர்ஷ்டம் மற்றும் ஏராளமாய் இருப்பது இந்த பெயருக்கான அர்த்தம் விசுவாசிகளின் ஐக்கியத்தை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஆசேரோடு(சந்தோம்) சேர்ந்த இந்த ஐக்கியம் விசுவாசிகளுக்கு அவசியமானது என்பதே.

**காத்தின் பிறப்பு: (ஆதி 30: 9-11)**

லேயாள் தான் பிள்ளைப்பெறுகிறது நின்றுபோனதைக் கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்கு மனைவியாக கொடுத்தாள். லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்: ஏராளமாகிறதென்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேரிட்டாள்.

**யாக்கோபின் ஆசீர்வாதம் (ஆதி 49:19)**

காத் என்பவன்மேல் ராணுவக் கூட்டம் பாய்ந்து விழும்; அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்துவிழுவான்=.

**மோசேயின் தீர்க்கதரிசனம்: (உபா 33:20-21)**

காத்தைக்குறித்து: காத்துக்கு விஸ்தாரமான இடத்தைக் கொடுக்கிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவன் சிங்கத்தைப்போல் தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான். அவன் தனக்காக முதல் இடத்தைப்பார்த்துக்கொண்டான்; அங்கே தனக்கு நியாயப்பிரமாணிகன் கொடுத்த பங்குபத்திரமாயிருக்கிறது; ஆனாலும் அவன் ஜனத்தின முன்னணியாய் வந்து, மற்ற இஸ்ரவேலுடனே கர்த்தரின் நீதியையும், அவருடைய நியாயங்களையும் நடப்பிப்பான் என்றான்.

# ஆசேர்




யாக்கோபின் 8வது மகன், சில்பாளின் 2-வது மகன். ஆசேர் என்ற வார்த்தைக்கு எபிரேய அர்த்தம் சந்தோமாய் இருப்பது

ஆசேரின் பிறப்பு: (ஆதி 30: 12-13)

பின்பு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள். அப்பொழுது லேயாள்; நான் பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்.

யாக்கோபின் ஆசீர்வாதம்: (ஆதி 49:20)

ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும்; ராஜாக்களுக்கு வேண்டிய ருசிவர்க்கங்களை அவன் தருவான்.

மோசேயின் தீர்க்கதரிசனம்: (உபா 33:24-25)

நப்தலியைக்குறித்து: நப்தலி கர்த்தருடைய தயவினாலே திருப்தியடைந்து, அவருடைய ஆசீர்வாதத்தினாலே நிறைந்திருப்பான். நீ மேற்றிசையையும் தென்திசையையும் சுதந்தரித்துக்கொள் என்றான். ஆசேரைக்குறித்து: ஆசேர் புத்திரபாக்கியமுடையவனாய், தன் சகோதரருக்குப் பிரியமாயிருந்து, தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான்.

இந்த வாரம் நாம் கற்றுக்கொண்ட நான்கு கோத்திரங்களையும் கானான் தேசத்திலேயே இவர்களுடைய பங்கு என்ன என்பதையும் அறிந்து கொள்ள நியாயாதிபதிகளின் புத்தகத்திலுள்ள தெபோராளின் பாடல்கள் மூலம் நாம் அதிகம் கற்று கொள்ள முடியும்.

தம்பி, தங்கையே உங்கள் ஒவ்வொருவருடைய பிறப்பைக் குறித்தும் கடவுளுக்கு ஒரு நோக்கமுண்டு. கிறிஸ்துவை விட்டுவிடாமல் அவரை பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களை வழிநடத்துவார்.



# CURRENT CONCERN








# இம்மாத முக்கிய கரிசனைகள்

1. தமிழகம் முழுவதும் அதிகரித்த காற்று மாசு! சென்னையில் மிக மோசம்!! காற்று மாசுபாடு ஏற்பட்டுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் காற்று மாசுபாடு முற்றிலுமாக குறைய தேவன் கிருபைப்பாராட்ட ஜெபிப்போம்.

2. திருச்சி: மின்சாரம் பாய்ந்து பள்ளி மாணவன் பலி சோகத்தில் கிராம மக்கள். சாலையில் நடந்து செல்லும் போது அனைவரும் கவனமாக இருக்கவும், கம்பிகளை தொடாமல் இருக்க ஜெபிப்போம்.

3. 2015க்கு பின் பதிவான அதிகபட்ச மழை.. சென்னையில் விடிய விடிய பேய் மழை. தாழ்வான பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க, வாய்க்கால்கள் தூர்வாரப்படவும், தண்ணீர் செல்லும் பாதைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளைஅகற்ற நடவடிக்கை எடுக்கப்படவும் வெள்ளக்காடான சாலைகள்! ஜெபிப்போம்.

4. போதைப் பொருள் தடுப்பு திட்டத்தைச் செயல்படுத்த ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அமைச்சர் ராஜேந்திர பால் கௌதம். போதை பொருளால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட பல திட்டங்களை அமைத்துள்ளனர்.அதை விரைவில் செயல்படுத்த ஜெபிப்போம்.

5. கோவையில் பிளஸ் 2 மாணவி தூக்கிட்டு தற்கொலை... ஆசிரியர் பாலியல் தொல்லை அளித்ததால் தற்கொலை செய்ததாக புகார்! ற்கொலை தீர்வாகாது என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட, தற்கொலைகள் தடுக்கப்பட, ஒவ்வொரு பள்ளிகளிலும் நேர்மையான ஆலோசகர்கள் பணியமர்த்யதப்பட ஜெபிப்போம்.

6. நிர்வாண பூஜை செய்தால் புதையல் வரும்.. போலிச்சாமியாரின் மாயவித்தைகள் - கர்நாடகாவில் நடந்த அதிர்ச்சி சம்பவம் மனித இதயங்களில் வேலை செய்யும் இது போன்ற போலி ஆவிகளை நம் தேவன் அழித்து அவர்களுக்கு மனந்திரும்புதலை கொடுக்க...

7. குழந்தைகள் :- இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம். பெற்றோரை இழந்து/கைவிடப்பட்டு விடுதிகளில், ஆசிரமங்களில் இருக்கும் பிள்ளைகளுக்காக, பரமபிதா அவர்களை வழிநடத்தவும், பிள்ளைகள் படிப்பில் கவனம் செலுத்தவும், போதைப் பொருள், சமூக வலைதளங்களுக்கு அடிமைப்படாதிருக்கவும், தற்கொலை எண்ணங்கள் மறையவும் ஜெபிப்போம்.

8. குழந்தைகள் பாலியல் வீடியோவை பார்த்து,ஷேர் செய்தால், வீடு தேடி வருகிற சிபிஐ ரெய்டு. குழந்தைகளை துன்புறுத்தி எடுக்கப்படும் பாலியல் காணொளிகள் உலகம் முழுவதும் பெரிய அளவிலான ஆன்லைன் பொருளீட்டும் வியாபார சந்தையாக உள்ள இது முழுமையாக தடை செய்யப்பட, இது தொடர்பான குற்றச்சாட்டுகளில் மொத்தம் 83 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது சிபிஐ நவம்பர் 14 அன்று 23 தனித்தனி வழக்குகளை பதிவு செய்துள்ளது. தீய எண்ணம் கொண்ட மனிதர்கள் மனம் மாற ஜெபிப்போம்.

9 அச்சுறுத்தும் 'ஒமைக்ரான்' வைரஸ் - கதிகலங்கும் உலக நாடுகள்! கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று, பல்வேறு வகைகளியில் உருமாற்றம் அடைந்து, தொடர்ந்து பரவி வருகிறது. இந்த உருமாற்றம் தடுக்கப்படவும் இயற்கை சீற்றங்கள், நோய்க்கிருமிகள், பொருளாதார சரிவு என தொடர்ந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் நிலை மாறி தேசங்களின் மீது தேவன் சமாதானம் உண்டாக்கவும் பாரத்தோடு ஜெபிப்போம்

10. விவசாயிகளின் போராட்டமும், அரசின் அறிவிப்பும் -'ரத்தாகும் 3 புதிய வேளாண் சட்டங்கள்.750 விவசாயிகளின் மரணத்திற்குப் பிறகு இந்த வன்முறை நம் அரசால் முடிவுக்கு வந்தது. நமது வல்ல தேவனால் வழிநடத்தப்பட்டு நமது தேசத்தின் நலனுக்காக நல்ல சட்டங்களை உருவாக்கவும், அவர்களின் விருப்பத்திற்காக எதையும் செய்யாதிருக்க ஜெபிப்போம்.

- Allen

# பணித்தளங்களில் கிறிஸ்துமஸ்

கிறிஸ்துமஸ் என்பது மகிழ்ச்சி, பரிசு வழங்குதல் மற்றும் குடும்பங்கள் ஒன்றுபடும் பருவமாக காணப்படுகிறது. கிறிஸ்துமஸ் என்றாலே கிறிஸ்துவின் பிறப்பை நாம் குடும்பத்துடன் ஒன்று கூடி கொண்டாடி மகிழும் ஒரு நாளாகும். இதில் காணப்படும் ஒரு சிந்தனைமிக்க கருத்து என்னவென்றால் நமது அன்பானவர்களுடன் சேர்ந்து ஜெபம் அல்லது கிறிஸ்துமஸ் ஆசீர்வாதத்தை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொள்வதை உள்ளடக்கியதாகும். இந்நன்நாளில் ஆண்டவரின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கும், மக்களுக்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி மூலம் இரட்சிப்பின் சத்தியத்தை எடுத்துரைப்பதற்கும் ஏதுவாக அமைகின்றன. யோவான் 3: 16 ல் நாம் வாசிக்கும் போது தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். எனவே தான் கிறிஸ்துமஸ் நாட்கள் ஆண்டவர் உலகத்தின் மீது வைத்திருக்கும் அன்பையும், பூமியிலுள்ள மக்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டிய அன்பையும் வலியுறுத்துகிறதாகக் காணப்படுகிறது.

இப்படிப்பட்ட அன்பை பகிர்ந்து கொள்வதற்காக கிஷ்ஸ்து பிறப்பு தினத்தை பணித்தள ஆலயங்களில் இருக்கும் விசுவாசிகளோடு இணைந்து கொண்டாடுவது நண்பர் சுவிசே ஜெபக்குழு ஊழியர்களுக்கு ஒரு சிறப்பம்சமான ஒன்றாகக் காணப்படுகிறது. இந்தக் கொண்டாட்டத்தை பார்க்கும் போது வியப்பாகவும் புதுமையாகவும் காணப்படுகிறது. அநேக மக்கள் வியக்குமளவிற்கு விசுவாசிகள் கிறிஸ்து பிறப்பை கொண்டாடுவது மாத்திரமல்ல கிறிஸ்துவை அறியாத மக்களுக்கும் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை எடுத்துரைக்கின்றனர். கிறிஸ்மஸ் என்றால் தேவன் ஒளியைத் தருகிறவர், தூய்மையானவர். நீதியுள்ளவர், நம்பிக்கையுடையவர, அன்புள்ளவர், அரவணைக்கிறவர் என்பதை அறிந்து அவருக்குள் பரிசுத்தமாய் வாழுவோம் என்று தீர்மானிக்கும் மகிழ்ச்சியான நாளாகவேக் காணப்படுகிறது. நம் பணித்தளங்களில் இருக்கும் விசுவாசிகள் மேய்ப்பர்களின் ஆர்வம், தேவ தூதர்களின் மகிழ்ச்சி, யோசேப்பின் கீழ்ப்படிதல், ஆகியவற்றால் நிரப்பப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் இம்மேளாவில் விசுவாசிகள் அநேக எதிர்ப்புக்களை சந்தித்தாலும் அவர்கள் விசுவாசத்தில் பின்னடையாமல் முன்னோக்கி செல்கின்றனர். இந்த ஆண்டும் நடைபெறவுள்ள கிறிஸ்துமஸ் மேளாக்களுக்காவும், விழாக்களுக்காகவும் பாரத்தோடு ஜெபிப்போம். கிறிஸ்து பிறப்பின் பண்டிகையை மனமகிழ்ச்சியோடு கொண்டாட தேவன் உதவிட அவர் கரத்தில் சமர்ப்பிப்போம். தேவ நாமம் மட்டும் மகிமைப்படட்டும்.

## ஜெபக்குறிப்புகள்:

1.பணித்தளங்களில் நடத்த திட்டமிட்டுள்ள கிறிஸ்துமஸ் விழாக்களுக்கு அரசு மற்றும் காவல்துறை அனுமதி மற்றும் பாதுகாப்புக் கிடைக்க ஜெபிப்போம்.

2.விசுவாசிகள் எந்தவொரு எதிர்ப்புமின்றி கிறிஸ்துமஸ் விழா நடத்தப்படவும், விழா நடக்கும் இடத்திற்குள் ஊடுருவும் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

3.அனைத்துப் பணித்தளங்களிலும் விழா கொண்டாட்டத்தின் போது நற்செய்தி அதிகமாகப் பகிரப்படவும், கிறிஸ்தவரல்லாதோறும் கிறிஸ்துவை அறிந்து, புதிய ஆத்துமாக்கள் வரவும் நாம் ஜெபிப்போம்.

4.கிறிஸ்துவின் அன்பு விசுவாசிகள் மத்தியில் தாராளமயிருக்கவும், வீடுகள் தோறும் கிறிஸ்துமஸ் கொண்டாடவும் ஜெபிப்போம்.

5.உலகிற்கு ஆண்டவர் தனது ஒரே மகனைக் கொடுத்ததே சரியான பரிசு, அவரை நம்புவது ஒன்றே மிகவும் அவசியம் என்பதை மக்கள் அறிந்து கொள்ள ஜெபிப்போம்.

6.விழாவிற்கு வரும் வாகனங்கள் விபத்துக்களில் இருந்து காக்கப்படவும், ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும், மனுர் கண்களில் தயவு கிடைக்கவும் ஜெபிப்போம்.

7.விழா நடைபெறும் பந்தல்களில் விட்டில் பூச்சிகளின் ஆபத்துக்கள் ஏற்படாமல் இருக்க ஜெபிப்போம்.

8.நல்ல கால சூழ்நிலை அமையவும், உணவு, குடிநீர் போன்ற அடிப்படை தேவைகள் சந்திக்கப்படவும், தடைகள் அனைத்தும் விலகவும் ஜெபிப்போம்.

## கிறிஸ்துமஸ் ஜெபம்:

பரலோகப் பிதாவே, உமது மிகுந்த இரக்கத்தினாலும், கிருபையினாலும் உமது அன்பான குமாரனை இவ்வுலகில் தந்ததற்காகவும், அவர் மூலம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் எங்கள் ஒவ்வொருவரையும் மீட்டதற்காகவும் உமக்கு நன்றி. அளவிட முழயாத உமது கிருபைகளுக்கு நாங்கள் எப்பொழுதும் நன்றியுள்ளவர்களாக இருக்கவும், எல்லாப் பிரச்சனைகளிலும், சோதனைகளிலும் நாங்கள் ஆறுதலடையவும், நித்திய இரட்சிப்பைப் பெறவும், உமது பரிசுத்த ஆவியால் எங்கள் இருதயங்களைத் தெளிவுப்படுத்தும். உமது அன்பான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக என்றென்றைக்கும் ஆட்சி செய்யும். ஆமென்.

- KTM




Social media பயன்படுத்தாம உங்களால் இருக்க முடியுமா? இந்த கேள்வி நம்மிடம் வரும்போது நமது விடை என்னவென்று நமக்கே தெரியும் அநேகருக்கு வாழ்க்கையே social media -வில் தான் ஓடுகிறது. தூங்கி விழிக்கும் போது அதில் விழிக்க ஆரம்பித்து டாய்லட், பாத்ரூம், சாப்பிடும் போது என்று ஆளுகை செய்வது social mediaதான் அப்படி இல்லைன்னு சொல்றீங்களா? உங்களை ஆளுகை செய்வது தேவ பிரசன்னமாக இருந்தால் ஆண்டவரைத் துதிக்கிறோம். ஆனால் இன்று அநேகருடைய வாழ்க்கை மிகுந்த கவலைக்கிடமாக social media addiction-ல் உள்ளனர். அவர்களுக்காக ஜெபிப்போமா? சில புள்ளிவிவரங்கள் வைத்து ஜெபிப்போம்.

- அக்டோபர் 2021ல் உலகம் முழுவதும் 4.55 பில்லியன் சமூக ஊடகப் பயனர்கள் இருப்பதாக kepios பகுப்பாய்வு காட்டுகிறது. இது மொத்த உலக மக்கள் தொகையில் 57.6%க்கு சமம்.

- கடந்த 12 மாதங்களில் சமூக ஊடகப் பயனாளிகள் எண்ணிக்கை வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

- அக்டோபர் 2021 வரையிலான ஆண்டில் 409 மில்லியன் புதிய பயனர்கள் சமூக ஊடகங்களில் இணைந்துள்ளனர். இது 9.9% வருடாந்திர வளர்ச்சிக்கு சமம் (அல்லது) ஒவ்வொரு நொடிக்கும் சராசரியாக 13 புதிய பயனாளர்கள் இணைகின்றனர்.

- வழக்கமான பயனாளிகள் ஒவ்வொரு மாதமும் 6.7 வெவ்வேறு சமூக ஊடகதளங்களை தீவிரமாக பயன்படுத்துகிறார் அல்லது பார்வையிடுகிறார்.

- பயனாளிகள் சமூக ஊடகங்களில் ஒரு நாளைக்கு சராசரியாக 2 மணி நேரம் 25 நிமிடங்கள் செலவிடுகின்றனர்.

- 2020-ம் ஆண்டில் இந்தியாவை 50,035 சைபர் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. முந்தைய ஆண்டைவிட இதுபோன்ற குற்றங்களில் 11.8 சதவீதம் அதிகரித்துள்ளது. ஏனெனில் 578 சமூக ஊடகங்களில் போலி செய்திகள் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்ற அதிகாரப்பூர்வ தரவுகள் காட்டுகின்றன.

- NCRB ஆய்வின் படி 4,047 ஆன்லைன் மோசடி வழக்குகள், 1,093 ஒடிபி மோசடிகள் மற்றும் 1,194 கிரெடிட்/டெபிட் கார்ட் மோசடி ஆகியவை நடந்துள்ளன. 2020ல் மட்டும் 260 ஏடிஎம் தொடர்பான வழக்குகள் பதிவாகியுள்ளன.

- சமூக ஊடகங்களை அதிகம் பயன்படுத்தும் நபர்கள் அதற்கு அடிமையாகி உடல் மற்றும் மனநலன் சார்ந்த பிரச்சினைகளினால் பாதிக்கப்படுகின்றனர்.

- ஆன்லைன் விளையாட்டில் இளைஞர்களின் வாழ்க்கை சீரழிக்கப்படுகிறது. தடைசெய்யப்பட்ட PUBG game மீண்டும் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்தபோது சுமார் 10 மில்லியன் பேர் Google playstore -ல் முன்பதிவு செய்ய காத்திருந்தனர்.

- Facebook 2.910 பில்லியன் மாதாந்திர செயலில் உள்ள பயனாளிகளை கொண்டுள்ளது.

- Youtube-ன் சாத்தியமாக விளம்பர வரம்பு 2,291 பில்லியன் ஆகும்.

- Whatsapp குறைந்தது 2 பில்லியன் பயனர்களை கொண்டுள்ளது.

- இன்னும் Instagram-1.393 பில்லியன், facebook messenger -1.3 பில்லியன், we chat 1,251 பில்லியன், tiktok 1 பில்லியன், Dauyin 600மில்லியன், QQ 591 மில்லியன், சீனா வைப்போ 556 மில்லியன், டெலிகிராம் 550 மில்லியன், Snapchat 538 மில்லியன், Pinterest 454 மில்லியன் என்ற செயலிகளில் மாதாந்திர பயனாளிகளை கொண்டுள்ளது.

இந்த செயலிகள் சிலவை நல்ல விஷயத்திற்கு அவசியமானதாகத்தான் இருக்கிறது. ஆனால் பயன்படுத்துவோர் அடிமையாகாமல் தேவனுக்கு நேரத்தை கொடுத்து வாழ்வில் social media-வில் உள்ள சவால்களை மேற்கொள்ளலாம். குடும்ப உறுப்பினருடன் நேரத்தை செலவிடுங்கள், உறவுகளை மேம்படுத்துங்கள், social media மூலமாக ஊழிய வாய்பை பயன்படுத்துங்கள். நாம் என்ன செய்தாலும் தேவனுடைய நாமம் மட்டும் மகிமை அடைய வேண்டும்.

## ஜெபக்குறிப்பு:

1. வேதம் வாசிக்காமல் Whatsappல் status வைப்போர் மனம்மாற, காலையில் தேவனை ஆராதிக்காமல் social media-வில் மூழ்கி அடிமைப்பட்டிருப்போர் விடுதலைப் பெற ஜெபிப்போம்.

2. Social media addictionனிலிருந்து வெளியே வர தீர்மானம் செய்வோரின் தீர்மானங்கள் வெற்றி பெற ஜெபிப்போம்.

3. 1 கொரி 10:12 ன் படி தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கடவன் என்ற வசனத்தின்படி கர்த்தருக்குப் பயந்து எச்சரிக்கையாய் செயல்பட ஜெபிப்போம்.

4. இந்தியாவில் அதிகரித்துவரும் ஆன்லைன் சூதாட்டத்தினால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். கர்த்தர் ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடையை உண்டுபண்ணவும் சூதாட்ட அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படவும் கருத்தாய் ஜெபிப்போம்.

5. வாலிபர்கள் செல்போன் மோகத்தில் குறிப்பாக இச்சையான காரியங்களை அதிகம் பார்ப்பதால், தங்களை அறியாமல் எதிர்பாலினரை சீண்டுவதற்கு தூண்டப்படுகின்றனர். இது பல வகையான குற்றங்கள் பெருகுவதற்கு ஏதுவாகிறது. இந்த இச்சையான காரியங்களிலிருந்து வாலிபர்கள் மீட்கப்பட, பாலியல் குற்றங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

6. பெண்கள் சினிமா, திரைக்கதை தொடர்கள், selfe மோகத்திலிருந்து வெளிவர, புத்தியுள்ள கன்னிகைகளாய் நடந்து கொள்ள ஜெபிப்போம்.

7. இளைஞர்கள் அநேகர் வேலைவாய்ப்பில்லாமல் ஆன்லைன் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் மனம் மாற, நல்ல வேலைக்கிடைக்கவும் social mediaவிலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

8. சங்கீதம் 17:15ன் படி நீதியில் (வேதம்) தேவனுடைய முகத்தை தரிசிக்க, விழிக்கும் போது தேவனுடைய சாயலில் திருப்தியாக ஜெபிப்போம்.

9. Social media-வில் பாதிக்கப்பட்டு வெளிவர முடியாமல் தற்கொலை எண்ணங்களில் தவிப்போர் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

10. கடந்த 12 மாதங்களில் ஒவ்வொரு மாதமும் இளைஞர்களுக்கான சவால்களில் எந்த காரியங்களை விட வேண்டும் என்று தீர்மானித்தோமோ, அதில் உறுதியாக நிற்க அனைத்து சவால்களையும் மேற்கொண்டு தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ ஜெபிப்போம்.

Ms. Hepzi
மங்கேலா கோலி



# மங்கேலா கோலி

மங்கேலா கோலி இன மக்கள் மராத்திய கோலி இனத்தின் உபஇனம். இவர்கள் பெரும்பாலும் வடக்கு மும்பையின் கடலோர கிராமங்களில் வசிக்கின்றனர். இவர்கள் மராத்தி மற்றும் குஜராத்தி இணைந்து மங்கேலி மொழி பேசுகின்றனர். மங்கேலா என்ற வார்த்தை மாங் என்ற மராத்தி மொழியிலிருந்து வந்தது. இதன் பொருள் மீன் பிடிக்கும் வலை, யேலா என்னால் மக்கள் என பொருள்படும். பொதுவாக இதன் பொருள் மீனவர்கள். இவர்களது சமுதாயம் மிகவும் பழமை வாய்ந்தது. இவர்கள் மஹாராஷ்டிராவின் பால்கார் மாவட்டம், டாமன் மற்றும் குஜராத்தின் வல்சாட் மாவட்டத்தில் வசிக்கின்றனர்.

இவர்களுடைய முக்கிய தொழில் மீன் பிடித்தல். இவர்கள் பொதுவாக நடுக்கடலில் மீன் பிடிப்பர். ஆண்கள் மீன் பிடிப்பதற்கென்ற 1 முதல் 2 மாதங்கள் வரை வீட்டை விட்டு கடலில் தங்கியிருப்பார்கள். இவர்களுக்கு தாண்டேல், தானு, பஹாதரே, மேஹர், தாவனே, தாண் மேர் மற்றும் பட்டீல் என வேறு பெயர்களும் உண்டு.

**நமது ஊழியம்:** நம் இயக்கத்தின் மூலம் யூனியன் பிரதேசமான சில்வாசா மற்றும் தாத்ரா நகர் ஹவேலியில் வார்லி இன மக்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியம் இம்மக்களையும் சந்திக்க ஏதுவாகிறதற்காக தேவனைத் துதிப்போம். வார்லி இன மக்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றம் இம்மக்களை இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணைக்க மிகவும் உதவுகிறதற்காக தேவனை துதிப்போம். 5 பணித்தளங்களில் மங்கேலா கோலி இன மக்களிடையே நாம் செய்யும் ஊழியம் வளர்ந்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

## ஜெபிக்க:

- மங்கேலா கோலி இனமக்கள் அனைவரும் இயேசுவின் அன்பை உணர்ந்து அவரின் மந்தையில் இணைய ஜெபிப்போம்.
- இவ்வின மக்கள் மத்தியில் அநேக பணித்தளங்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.
- மங்கேலா கோலி இனத்தை சேர்ந்த வாலிபர்கள் அநேகர் சுதேச ஊழியர்களாக நம் ஊழியத்தில் இணைந்து தேவ ராஜ்யத்தை கட்ட ஜெபிப்போம்.
- மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள இம்மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்த்தப்பட ஜெபிப்போம்.
- இம்மக்களின் வறுமை ஒழிய ஜெபிப்போம். மீன் பிடிக்கும் இம்மக்கள் மனிதரை பிடிப்போராய் மாற ஜெபிப்போம்

-Mrs.Sheela Mary



# கொலைவாதிகள்

கடந்த மாதம் கொடுமைவாதிகளுக்காய் ஜெபித்த நாம் அதன் தொடர்ச்சியாய் இந்த மாதம் கொலைவாதி களுக்காய் ஆண்டவரிடம் மன்றாடுவோம். கொலை என்பது பல்வேறு காரணங்களுக்காக செய்யப்படுகிறதாய் இருக்கிறது. நம் நாட்டில் இப்போது ஒரு சாதாரண விஷயம ாக மாறிக்கொண்டு வருகிறது. குடிபோதையில் குடும்பத்தி னர் கொல்லப்படுவது, நடத்தையின் சந்தேகத்தில் கொலை, காதலுக்காக கொலை, சொத்துக்காக கொலை, ஏன் சமையலில் கூட குறை கூறுவதன் மூலம் கொலை ,என சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் எல் லாவற்றிற்கும் மேலாக ஒருவர் தன்னலமாக, புத்தி யீனமாய் தன் உயிரையே மாய்த்து, தற்கொலைக்கு ஆளாகின்றனர். இப்படிப்பட்டவர்கள் எல்லோரையும்தான் நாம் கொலைவாதிகள் என்கிறோம்.

இச்செயலை செய்கிறவர்கள் அடிப்படையில் இரண்டு காரணங்களுக்காகவே பெரும்பாலும் தேர்ந்தெடுக்கின்றனர். ஒன்று தன்னலம், மற்றொன்று பழிவாங்கும் நோக்கு, இவை இரண்டுமே நமக்குள் காணப்படக் கூடாது என்று நம் தேவன் நமக்கு கட்டளையிடுகிறார்.

'உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்று கூறுகிறார். இவற்றைப் படிக்கும் நாம் இவ்வாறு எந்த செயலையும் செய்யவில்லை என்று நினைக்கலாம். ஆனால் நம்மில் எத்தனை பேர் நம்மை சுற்றியுள்ளவர்களிடத்தில் சமாதானமாக இருக்கிறோம்? மத்தேயு 5: 21, 22 நமக்கு சொல்லுகிறது, நம் சகோதரனை வீணனென்றோ, மூடனென்றோ கூறினால் நாம் எரிநரகத்திற்கு ஏதுவானவர்கள். மேலும் நியாயமில்லாமல் கோபித்துக் கொண்டால் நாம் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவானவர்கள் என்று கூறுகிறது. இதன் மூலம் கொலையாளிகளுக்கு மட்டும்தான் நியாயத்தீர்ப்பு உண்டு என்னும் கூற்று பொய்யாகிறது. எனவே நாம் கண்ட சகோதரனிடத்தில்/ சகோதரியினிடத்தில் அன்பு கூர்ந்து நம் வெளிச்சத்தை மென்மேலும் பிரகாசிக்கச் செய்து, நம் தேவனுக்கு ம கிமை சேர்ப்போம். இப்பொழுது கொலை வாதிகளுக்காய் ஜெபிப்போம்.

**ஜெபக்குறிப்புகள்:**

1. நரபலி என்று தன் இரண்டு மகள்களையும் கொலை செய்த ஆந்திர டாக்டர் குடும்பம் இவ்வாறு கல் நெஞ்சத்தோடு செயல்படும் பெற்றோருக்காய் மன்றாடுவோம்.

2. குடும்ப சண்டை மற்றும் சொத்து தகராறில் பெற்றோர் உடன் பிறந்தோரை கொலை செய்த 20 வயது சண்டிகர் வாலிபன் சொத்துக்காக பத்திரத்தில் கையெழுத்து வாங்கியதும் தகப்பனை குற்றுயிராய் மருத்துவம னையில் விட்டு சென்ற டாக்டர் இவ்வாறு பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு விரோதமாய் எழும்பி கொலை செய்யும் அவலம் அகல ஜெபிப்போம்.

3. மே மாதம் 2021-ல் பெற்றோர்கள் திட்டியதால் அவர்களை கொலை செய்த சிறுவன் இவ்வாறு வயது வரம்பு இல்லாமல் நடைபெறும் கொலைகள் ஜெபிப்போம்.

4. தவறான உறவுகளால் தான் பெற்ற இரண்டு குழந்தைகளையும் கொலை செய்த தாய் இதுபோன்று கொடுமை இனி அறங்கேராமல் இருக்க ஜெபிப்போம்.

5. இராமலிங்கம் சொத்துக்காக மாற்றுத்திறனாளியை மணந்து பின்னர் விப்பாம்பு கொண்டு கடிக்க வைத்து கொலை செய்த கணவன் இப்படி குற்றமற்ற இரத்தம் இனியும் நம் தேசத்தில் சிந்தப்படாமல் இருக்க ஜெபிப்போம்.

6. வரதட்சணை கொடுமையினால் 2020-இல் மட்டும் சுமார் 7000 பெண்கள் மரித்துள்ளதாக ஆய்வு ஒன்று கூறுகிறது. அப்படியென்றால் 7000 குடும்பங்கள் உடைந்துள்ளது. அவர்களுக்கு பிள்ளைகள் இருந்தால் அவர்களின் நிலை என்ன? உருக்கமாய் ஜெபிப்போம்.

7. கௌரவக்கொலை இப்போது பெருமளவில் நடைபெற்று வருகிறது. வேற்று சாதியினரை திரு மணம் செய்வதால் நடைபெறும் இக்கொடுமையினால் 2014-2016ல் மட்டும் 288 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களுக்காக ஜெபிப்போம்.

8. தேசிய குற்ற ஆவண காப்பகம் அறிக்கையின்படி 2020-ல் 1.53 லட்சம் பேர் தற்கொலையால் மரித்துள்ளனர். இவற்றில் பெரும்பாலும் நோயின் கொடுமை தாங்காமல் இம்முடிவை எடுத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து தினக்கூலி தொழிலாளர்கள் பெருமளவில் தற்கொலை செய்துள்ளனர். இனியும் இவ்வாறு நடைபெறாமல் இருக்க ஜெபிப்போம்.

9. நம் தேசத்தில் பாலியல் தொல்லையினால் 2021 நவம்பர்-ல் கோவையில் 17 வயது மாணவி தற்கொலை செய்து கொண்டாள். இவ்வாறு மன உளைச்சல், தனிமை, சரியான வழிகாட்டுதல் இல்லாமல் தற்கொலை செய்துகொள்ளும் வாலிபர்களுக்காய் திறப்பில் நிற்போம்.

10. 2021ல் டெல்லியில் ஆதர்ஷ் நகரில் சங்கிலிப்பறிப்பில் பெண் கொலை செய்யப்பட்டார். இதுபோன்று திருடர்களால் கொலையில் முடியும் சம்பவங்களை நிறுத்திட ஜெபிப்போம்.

- Jeba Tyson

லஞ்சம், ஊழல் என்பது புற்று நோயைப் போல பரவி, இன்றைக்கு சமூகத்தை பாதிக்கும் முக்கிய பிரச்சனைகளுள் ஒன்றாக உருவெடுத்துள்ளது. எந்த ஒரு நாட்டின் வளர்ச்சி திட்டங்களையும் ஊழல் சீரழிப்பதோடு, அந்நாட்டின் நிலையான ஆட்சிக்கும், உள்நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாகவும், சாமானியன் தொடங்கி தேசத்தின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கும் தடைக்கல்லாகவே மாறி விட்டது. இந்தியாவில் அரசு சார்ந்த வேலையை முடிக்க ஆண்டில் ஒருவர் லஞ்சம் கொடுக்கிறார். லஞ்சம் வாங்காமல், ஊழல் செய்யாமல் நேர்மையாக இருக்க விரும்பும் நபர் இந்த சமூகத்தில் சந்திக்கும் பிரச்சனைகளும், மன வேதனைகளும் அதிகம். அந்த நபரைக் காட்டிலும் அவரது குடும்பத்தினரின் நிலை மிகவும் பரிதாபமானதாக உள்ளது.

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் லஞ்சம் கொடுப்பவராகவோ அல்லது பெறுபவராகவோ இருக்கிறார்கள் என்பதுதான் இன்றைய நிலை. சில வருடங்களுக்கு முன் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி, 62% இந்தியர்கள் லஞ்சம் கொடுப்பது அல்லது செல்வாக்கு பயன்படுத்தி, பொது அலுவலகங்களில் வெற்றிகரமாக வேலைகளை முடித்துக் கொள்வதில் ஈடுபடுகின்றனர். 180 நாடுகளிடையே நடத்தப்பட்ட ஆய்வில், 2020ம் ஆண்டில் ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 86வது இடத்திலிருந்தது. ஊழல் பெருகி தற்போது இந்த பட்டியலில் மேலே வந்துள்ளது. தமிழகத்திலும் ஊழல் அதிகரித்து கொண்டே வருகிறது. குறிப்பாக நிலம் மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக 41%பேரும், நகராட்சி நிர்வாகங்களில் பணி நடக்க 19% பேரும், காவலர்களுக்கு 15% பேரும் லஞ்சம் தருவதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. 82%பேர் ஊழலைக் கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அல்லது நடவடிக்கைகள் பயனற்றவை என்று தெரிவித்துள்ளனர். அதே போல 64% மக்கள் லஞ்சம் கொடுத்தால் மட்டுமே வேலை நடக்கும் என்று கூறியுள்ளனர். லஞ்சம் வாங்குவது இந்தியாவில் சில மாநிலங்களில் குறைந்துள்ள நிலையும், தமிழகத்தில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 10% லஞ்சம் பெறுவோர் எண்ணிக்கை கூடியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழலும் லஞ்சம் வாங்குவதும் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே எண்ணி பொதுமக்களை சுரண்டும் அரசியல்வாதிகள் மிகுந்த இந்நாட்களில் ஊழல் எதிர்ப்பு தினம் மிக முக்கியத்துவம் பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 9ஆம் தேதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது. ஊழலை தடுப்பதோடு அது குறித்து விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய நோக்கம்.

# ஊழல்

**ஜெபக்குறிப்புகள்:**

1. ஒவ்வொரு தனி மனிதனையும் பாதிக்கும் ஊழல் சமூகத்தின் ஆணிவேர் வரை சென்றுள்ளது. இப்படி சமூகத்தையே பாதிக்கும் ஊழலின் வேர் பிடுங்கப்படவும், நம் தேசம் ஊழல் இல்லாத தேசமாக மாறி உலகிற்கே வழிகாட்டியாக மாறவும் ஜெபிப்போம்.




2. எந்தவொரு பணிக்கும் எக்காரணத்தைக் கொண்டும் லஞ்சம் கொடுக்கவும் மாட்டேன். லஞ்சம் வாங்கவும் மாட்டேன் என அனைவரும் உறுதிமொழி எடுத்து அதைக்கடைபிடிக்க ஜெபிப்போம்.

3. அரசு சேவைகளை கால தாமதமின்றி விரைவாக பெறுவதற்கு லஞ்சம் கொடுப்பது பெரிய தவறில்லை என்கிற மனநிலைக்கு பொதுமக்கள் வந்து விட்டனர். இந்த மனநிலை மாற, பொறுமையுடன் இருந்து சேவைகளை பெற ஜெபிப்போம்.

4. பள்ளி கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட இளம் சமுதாயத்தினரிடம் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடம் உள்ளது. சிறு வயது முதலே நேர்மையாக இருக்க கற்றுக்கொடுக்க, அதன் மூலம் இனி வரும் சமுதாயமாவது ஊழலற்றதாக இருக்க ஜெபிப்போம்.

5. அரசுக்கு செலுத்த வேண்டிய வரியை, பல்வேறு காரணங்களை கூறி செலுத்தாமல் இருப்பதும் ஒரு வகை ஊழல்தான் என்பதை மக்கள் உணர்ந்து கொண்டு, வரி செலுத்த ஜெபிப்போம்.

6. கல்வி, விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரத்தில் கணிசமாக வளர்ச்சி அடைந்துள்ள நம் நாட்டில், ஊழலும் அது தொடர்பான செயல்பாடுகளும் அளவுக்கு அதிகமாக உயர்ந்துள்ளது. தேசத்தின் அனைத்து தீமைகளுக்கும், கலவரங்களுக்கும் காரணமான லஞ்சம் முற்றிலும் தவிர்க்கப்பட ஜெபிப்போம்.

7. அதிக கட்டுபாடுகள், சிக்கலான வரிகள் மற்றும் உரிமம் அமைப்புகள், வெளிப்படையான சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் இல்லாமையே ஊழலுக்கான காரணங்கள். இதற்கு அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க பாரத்தோடு ஜெபிப்போம்.

*- Mrs. Steffi*

ஓர் நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும் என எண் 24:17ல் வாசிக்கிறோம். பிலேயாம் தீர்க்கன் மேசியாவை ஒரு விளக்காகவும், நட்சத்திரமாகவும் தீர்க்கதரிசனம் உரைக்கிறார்.

இந்த உலகில் எத்தனையோ மகான்கள் தோன்றி மறைந்துள்ளனர். புத்தர், ஜொராஸ்டர், சாக்கிரட்டீஸ், முகமது, லூத்தர், குருநானக், ஆபிரகாம் லிங்கன், காந்தி, நேரு, அப்துல்கலாம் போன்றவர்கள் தோன்றி மறைந்துள்ளர். அந்தந்த காலத்தில் இவர்கள் எல்லோரும் நன்னெறிகளை போதித்தாலும், சமூகத்தில் சிறப்பு செயல்களை செய்தாலும் இவர்களை வரலாற்று நட்சத்திரங்கள் என்று சொல்லுவார்கள். அவர்கள் வழிகாட்டிகளே தவிர உண்மையான ஒளி அல்ல. உண்மையான ஒளியை குறித்து கீழே காண்போம்.

### 1. இயேசுவே உண்மையான ஒளி (Christ the True Light):

பழங்காலத்தில் நட்சத்திரங்களைக் குறித்து நம்பிக்கை என்னவென்றால் Jupiter என்ற வியாழன் ஒரு நட்சத்திரமும் Saturn என்ற சனி நட்சத்திரமும் (Star of Palestine) 794 வருடத்திற்கு ஒருமுறை கூடுமாம். அதைதான் திருமறையில் குறிப்பிடும் ஞானியர் நட்சத்திரத்தை தேடி ஏரோது ராஜாவிடம் வந்து கேட்கிறார்கள். யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள் (மத் 2:2).

யோவான் குறிப்பிடுவது கடவுள் வார்த்தையாக இருந்தார். அந்த வார்த்தைக்குள் ஜீவன் இருந்தது.அந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாய் இருந்தது என்கிறான்.அந்த ஒளியைக்குறித்து நற்செய்தி நூலில் சாதாரணமாகவும் அசாதாரணமாகவும் எடுத்துரைக்கிறார்கள்.

இயேசு தமது பிறப்பில் அசாதாரண வகையில் உன்னதமானவரின் பெலன்கொண்டு கன்னி மரியாளிடம் வந்து பரிசுத்த ஆவியானவரால் நிழல்கொண்டு கர்ப்பம் தரித்து, அவள் மூலமாக சாதாரணமாக குழந்தையாய் இயேசு பாலகன் பிறந்தார். அவர் மனிதனாக ஞானத்திலும், வளர்த்தியிலும், மனுஷர்தயவிலும், தேவ கிருபையிலும் வளர்ந்தார். நம்மைப்போல மனிதனாக வேலை செய்தார். களைப்புற்றிருந்தார். தாகம், பசி, துன்பம், அழுகை அவருக்கு இருந்தது. ஆனால் அதே வேளையில் அவர் மேசியா எனப்பட்டார். வார்த்தை கடவுளாய் இருந்தார். விளக்கு என்றும், வாழ்வு என்றும் யோவானால் குறிப்பிடப்படுகிறார்.

இயேசு தம்மையே நான் இருக்கிறேன் என்றார். இருக்கிறவராய் இருக்கிறேன் (I am who I am) என்று கடவுள் தம்மைப்பற்றி உரைத்த வார்த்தையை இங்கு இயேசு பயன்படுத்துகிறார். ஞூ ழிது இப்படி யாரும் சொல்லவில்லை. நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்று இயேசு சொன்னார்.


ஏனென்றால் இவரிடம் எந்தப் பாவமும் காணப்படவில்லை, குற்றமில்லை, மனித வாழ்வின் மேல் அதிகாரம் கொண்டிருந்தார். மனிதருடைய பாவங்களை மன்னித்தார். இரக்கமுள்ளவராய் பல்வேறு நோய்களை குணமாக்கினார். பிறருடைய பாவங்களுக்காகச் சிலுவையை சுமந்தார். சிலுவையில் மரித்தார்.மீண்டும் உயிரோடு எழுந்தார். அதைக் கண்ட நூற்றுக்கதிபதி இவர் மெய்யான தேவக்குமாரன் என்றான்.

எனவேதான் யோவான் நான் அல்ல இயேசுவே மெய்யான ஒளி என்று இயேசுவைக் குறித்து சாட்சி கொடுத்தான். இந்த உலகம் இதை மறைக்க முடியவில்லை. திருச்சபை தங்களது ஆடம்பரங்களாலும், அலங்காரங்களாலும் அந்த ஒளியை மறைக்கக்கூடாது. உலகில் தோன்றிய இயேசு கிறிஸ்து ஒருவராய் வாழ்வின் மேன்மைக்காக பாவ ஈடேற்றத்திற்காக தமது உயிரை கொடுத்து வாழ்வளித்தார். இவரே மெய்யான ஒளி.

### 2. அந்த ஒளி எல்லா மனிதரையும் ஒளிரவைக்கிறது: (That enlighten every man)

இயேசுவின் பிறப்பின் செய்தியை எல்லாருக்கும் சந்தோஷம் என தேவதூதர் அறிவித்தனர். இருளில் நடக்கிறவர்கள் வெளிச்சத்தைக் கண்டார்கள் என்று தீர்க்கன் உரைத்தான்.வாழ்வினை இருள்போன்ற நிலையில் கழித்த மக்கள் இயேசுவின் பிறப்பால் மகிழ்ச்சியுற்றனர். நற்செய்தியால் இருள் விலக்கப்பட்டது. வாழ்வு இழந்தவர்கள், வழியறியாதவர்கள் சந்திக்கப்பட்டனர்.

கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்.தரித்திரருக்கு



சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்... என்னை அனுப்பினார் என்றார் இயேசு (லூக் 4:18,19).

ஞானிகளுக்கு கடவுள் வாழ்வின் இரகசியங்களை மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தினார் என்கிறார் இயேசு. வாழ்வை சுமையாக நினைத்தவர்களுக்கு எளிமையாக விளக்கி கவலைப்படாதிருக்க கற்றுக்கொடுத்தார். சமய தலைவர்களின் தவறுதலான நடத்துதலை கண்டித்தார். மக்கள் மீது பாரமான சுமையை சுமத்துகிறீர்கள். ஆனால் நீங்கள் சுமப்பதில்லை என்றும் நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்று சமயத்தலைவர்களைச் சாடுகிறார். வாழ்வை எளிமையாக்கி வாழ அழைக்கிறார். கடவுள் அன்புள்ளவர். அவர்தம் பிள்ளைகளை நேசிப்பதால் தான் தம் ஒரேபேரான குமாரனை உலகத்திற்கு அனுப்பினார். அவர் தமது வாழ்வை உலக மக்களுக்காக கொடுத்தார் என வேதம் கூறுகிறது. அந்த வாழ்வை அனுபவிக்க எல்லா மக்களோடும் அன்புள்ளவர்களாய் வாழ்ந்து, ஒருவரை ஒருவர் மன்னித்து, பிறருக்கு நன்மை செய்து எல்லோரும் கடவுளின் பிள்ளைகள் என்ற உறுதிப்பாட்டை பெற்றக்கொள்ள வேண்டும் என இயேசு தெளிவுப்படுத்துகிறார்.




(He enlightens every one).

நம்மை வெளிச்சத்தில் நிறுத்துவதற்காகப் பிறந்தார். நாம் வெளிச்சமாய் இருப்பதற்காக இயேசு அழைக்கிறார். நிலாவில் ஒரு குழு கால் வைத்தனர். செய்தியாளர்கள் அவர்களை சந்தித்து நீங்கள் எங்களுக்கு முதல் அதிசயமானவர்கள் உலகம் அடைய முடியாததை அடைந்து விட்டது. நீங்கள் விஞ்ஞானத்துறைக்கு விளக்கு என்றனர். அதற்கு Irwin எற்ற விஞ்ஞானி அதைவிட மேலானது இறைவன் மண்ணுக்கு வந்தது. நாங்கள் விஞ்ஞானதுறைக்கு ஒளி கொண்டு வந்தோம் என சொல்லுகிறீர்கள். இறைவன் மனித வாழ்வுக்கு இயேசு மூலம் ஒளி கொண்டுவந்தார் என்றார். உண்மையில்லையா?

### 3. ஒளி உலகத்தில் வந்து கொண்டிருந்தது (Was coming in to the world):

உன்னதத்தில் தோன்றிய அருணோதயம் என்றார் சகரியா. யோவான் கூறுவது ஒளி உலகத்தில் வந்தது, உலகம் அவரை அறியவில்லை. இருளானது ஒளியை பற்றிக்கொள்ளவில்லை என்கிறார். ஒரு பெரிய கல் பூமியில் பதிந்திருக்கிறது. சிறு பூச்சிகள் கல்லின் கீழ் நீண்டகாலம் இருளில் வாழ்ந்து வருகிறது. கல் புரட்டப்பட்டதும் வெளிச்சம் பட்டவுடனே பூச்சிகள் நாலாப்பக்கம் ஓட்டம் பிடிக்கிறது. மீண்டும் அந்த கல் அதே இடத்தில் வைத்ததும் பூச்சிகள் அவசர அவசரமாக திரும்ப வந்து சேருகிறது. ஏராளமான மக்கள் பூச்சிகளைப்போல் இருளை விரும்புகிறார்கள். வெளிச்சத்தை மறுக்கிறார்கள் என்றார் சாது சுந்தர்சிங். வெளிச்சத்துக்கு எதிராக நிற்க சக்திகள் இப்பொழுது பெருகியிருக்கின்றன. வெளிச்சத்தை அணைக்கவும் பிரயாசப்படுகிறார்கள். இந்தக்கொடிய முயற்சி இப்பொழுது கடுமையாக இந்தியாவிலும் வந்துவிட்டது. கிறிஸ்தவ நற்செய்தியால் இந்தியாவில் மலிந்து கிடந்த கொடிய தீய பழக்கவழக்கங்கள், மூட நம்பிக்கைகள் ஓரளவுக்கு அகற்றப்பட்டது. மீண்டும் அந்தபழக்கவழக்கங்களை விரும்பும் கூட்டம் இப்பொழுது தலைதூக்கி நிற்கிறது. மக்களின் அழிவைப்பற்றி அவர்களுக்கு கவலையில்லை.

இந்த நிலையில் திருச்சபை தமது திருப்பணியை மறுசீரமைத்து செயல்பட அழைக்கப்படுகிறது. The Prince of darkness satan trying to rule in the hearts of unrighteous. The true light is coming into the world. Let the light shine up on you that is Christmas.

சுவிசேஷகர் லூவீஸ் ஸ்டீபன் என்பவன் தாம் சிறுவயதில் வீட்டு ஜன்னலிலிருந்து வெளியே எட்டி பார்த்துக் கொண்டிருந்தான். தெரு விளக்குகளை ஒவ்வொன்றாய் எரியவிட்டு வந்தான் வேலைக்காரன். எல்லா விளக்கும் எரிந்து ஊரின் இருளை போக்கும் காட்சி அருமையானது என்கிறான் சிறுவன் லூயீஸ். இயேசு நானே உலகத்திற்கு ஒளி என்றார். மனித பாவ இருளையும் போக்கவந்தார். எந்த மனிதனையும் பிரகாசிக்கச்செய்கிற மெய்யான ஒளி இயேசு. அவர் பிறந்த தினத்தை தான் கிறிஸ்துமஸ் என ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடி வருகிறோம். கிறிஸ்மஸ் ஒளி உலகெங்கும் தொடர்ந்து ஒளிர செய்வோம் நம்முடைய வாழ்வின் மூலம் கிறிஸ்துவின் ஒளி அநேக உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஒளிரட்டும்.

- True Discipleship







# கிறிஸ்துவின் பிறப்பில் 12 கோத்திரங்கள்

இந்த மூன்றாம் வார செய்தியில் யாக்கோபுக்கு பிரியமான ராகேலுடைய இரு பிள்ளைகளாகிய யோசேப்பு மற்றும் பென்யமீனை குறித்து கற்றுக்கொள்வோம். கடந்த இரு வார செய்திகளில் இருபெண்கள் அதாவது ராகேல், லேயாள் தன் கணவன் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரியமாய் நடத்த வேண்டும் என்று சொல்லி பிள்ளைகள் பெற்றதையும், தங்கள் வேலையாட்களையும் யாக்கோபுக்கு மறுமணையாட்டியாக கொடுத்து அவர்கள் மூலம் தங்களுக்கு பிள்ளைகளை பெற்று, இவர்கள் பெயரிட்டு அழைத்ததையும் பார்த்தோம். இந்த இரண்டு ஸ்தீரிகளும் முற்பிதாக்களின் மனைவியரில் இடம் பெறுகின்றனர். அதாவது புரியும்படி கூறினால் நமக்கு மூன்று முற்பிதாக்கள் நான்கு அம்மாக்கள் (வீஜுஷளள ஊஷீமிமிஜுளஷ, ய்லிற்ஷ துலிமிஜுளஷ்) இந்த வாரச்செய்தியில் கோத்திர பிதாக்களில் கடைசி இரண்டு நபர்களை கற்றுக்கொள்வோம். அதில் முதலாவதாக வருகிற யோசேப்பை கற்றுக்கொள்வோம்.

# யோசேப்பு




யோசேப்பு யாக்கோபின் 11–வது மகன், ராகேலின் முதல் மகன். யோசேப்பு என்ற வார்த்தைக்கு எபிரேய அர்த்தம் அவன் சேர்த்துக் கொள்வான் கிறிஸ்துவின் சுவிசேத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஒவ்வொரு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிக்கும் வெகுமதியாக பரலோக ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவான் என்பதே. அவனுடைய பிறப்பை குறித்து பார்க்கும் பொழுது (ஆதி 30:22-24) தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: தேவன் என் நிந்தையை நீக்கிவிட்டார் என்றும், இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள்.

### யாக்கோபின் ஆசீர்வாதம் (ஆதி 49:22-26)

யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும். வில்வீரர் அவனை மனமடிவாக்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள். ஆனாலும், அவனுடைய வில் உறுதியாய் நின்றது; அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; இதினால் அவன் மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையும் ஆனான். உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார். உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்து, நித்திய பர்வதங்களின் முடிவுமட்டும் எட்டுகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக.

### மோசேயின் தீர்க்கதரிசனம் (உபா 33:13-17)

யோசேப்பைக்குறித்து: கர்த்தரால் அவனுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக; அது வானத்தின் செல்வத்தினாலும், பனியினாலும், ஆழத்திலுள்ள நீரூற்றுகளினாலும், சூரியன் பக்குவப்படுத்தும் அருமையான கனிகளினாலும், சந்திரன் பக்குவப்படுத்தும் அருமையான பலன்களினாலும், ஆதிபர்வதங்களில் உண்டாகும் திரவியங்களினாலும் நித்திய மலைகளில் பிறக்கும் அரும்பொருள்களினாலும், நாடும் அதின் நிறைவும் கொடுக்கும் அருமையான தானியங்களினாலும் ஆசீர்வதிக்கப்படுவதாக. முட்செடியில் எழுந்தருளினவரின் தயை யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக. அவன் அலங்காரம் அவன் தலையீற்றுக் காளையினுடைய அலங்காரத்தைப்போலவும், அவன் கொம்புகள் காண்டாமிருகத்தின் கொம்புகளைப்போலவும் இருக்கும்; அவைகளாலே ஜனங்களை ஏகமாய் தேசத்தின் கடையாந்தரங்கள்மட்டும் முட்டித் துரத்துவான்; அவைகள் எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களுமானவைகள் என்றான்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து பிரயாணப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்கு சென்றதும் அதை தொடர்ந்த நிகழ்வுகளுமே, வேதத்தின் மறுபகுதியாகும் என்பதை நாம் அறிவோம். ஆனால் முதலில் எகிப்துக்கு சென்றது இந்த யோசேப்பே இந்த யோசேப்பை சகோதரர்கள் குழிக்குள் போட்டார்கள். ஆனால் அவனை இஸ்மவேலர் கையில் விற்கவில்லை. வேதம் தெளிவாக சொல்லுகிறது ஆதி 37:28 அந்த வர்த்தரான மீதியானியர் கடந்து போகிற போது அவர்கள் யோசேப்பை அந்த குழியிலிருந்து தூக்கியெடுத்து அவனை இஸ்மலேர் கையில்

20 வெள்ளிகாசுக்கு விற்றுபோட்டார்கள். அவர்கள் யோசேப்பை எகிப்திற்கு கொண்டு போனார்கள். எகிப்திற்கு கொண்டுபோனார்கள் என்பது மூல மொழி பெயர்ப்பில் பல வர்த்தகர்களிடம் இரண்டு மூன்று முறை விற்கப்பட்டு, இரண்டு மூன்று பேர் கைகள் மாறி கடைசியாக எகிப்துக்கு கொண்டு செல்லப்பட்டான் என்று சொல்லப்படுகிறது. பின்பு எகிப்துக்கு சென்ற இஸ்ரவேலர்களின் எண்ணிக்கை 70 என்று யாத்திராகமம் முதல் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். இந்த 70பேர் இஸ்ரேல் என்னும் பெரிய ஜனக்கூட்டமாக மாறியது. இப்பொழுது பென்யமீனை குறித்து படிப்போம்.




# பென்யமீன்

பென்யமீன் பிறப்பு வரிசை யாக்கோபின் 12-வது மகன். ராகேலின் 2வது மகன், யோசேப்பின் ஒரே தம்பி. பென்யமீன் என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் என் வலது கரத்தின் புதல்வன் . கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் அடிப்படையில் பார்க்கும் பொழுது பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் குமாரனையும், அவரோடு அமைந்திருக்கும் விசுவாசிகளையும் நினைவுபடுத்துகிறது. அவனுடைய பிறப்பை குறித்து பார்க்கும் பொழுது (ஆதி 35:16-18) பின்பு, பெத்தேலை விட்டுப் பிரயாணம் புறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம் தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளை பெற்றாள்; பிரசவத்தில் அவளுக்குக் கடும்வேதனை உண்டாயிற்று. பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும்வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள். மரணகாலத்தில் அவள் ஆத்துமா பிரியும்போது, அவள் அவனுக்கு பெனொனி என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோ, அவனுக்கு பென்யமீன் என்று பேரிட்டான்.

### யாக்கோபின் ஆசீர்வாதம் (ஆதி 49:27)

பென்யமீன் பீறுகிற ஓநாய்; காலையில் தன் இரையைப் பட்சிப்பான்; மாலையில் தான் கொள்ளையிட்டதைப் பங்கிடுவான் என்றான்.

### மோசேயின் தீர்க்கதரிசனம் (உபா 33:12)

பென்யமீனை குறித்து; கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார் என்றான்.

பென்யமீன் பிறப்பில் அவனுடைய தாய் ராகேல் மரித்து அடக்கம் பண்ணப்பட்டாள். யாக்கோபிற்கு கானானுக்கு வெளியே பிறந்த ஒரு மகன் இந்த பென்யமீன் இந்த கோத்திரத்திலிருந்து தான் இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல் வந்தான். புதிய ஏற்பாட்டிலுள்ள சவுலும் பென்யமீன் கோத்திரத்தானே.

### யோசேப்பின் குமாரர்கள்:

வேதம் சொல்லுகிறது, ஆதி 41:50-52ன்படி பஞ்சமுள்ள வருங்கள் வருவதற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்து அவனுக்குப் பெற்றாள். யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என் தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான். நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்.

### இவர்களுக்கு யாக்கோபு அளித்த ஆசீர்வாதம்:

அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என்பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள் என்றான். இவ்விதமாக அவன் அன்றைத்தினம் அவர்களை ஆசீர்வதித்து: தேவன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவாராக என்று இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்.

தம்பி தங்கையே இந்த மூன்று வாரத்திலும் யாக்கோபின் பன்னிரெண்டு புத்தரர்களையும் யோசேப்பின் இரண்டு குமாரர்களையும் சேர்த்து 14 குமாரர்களை நாம் படித்திருக்கிறோம். இந்த 14 குமாரர்களை மையமாக கொண்ட சரித்திர நிகழ்வுகளை வேதத்தில் வாசிக்கும் பொழுது கவனமாய் தேவதிட்டம் என்ன என்பதையும் மேசியாவை உலகிற்கு தர இந்த குடும்பம் எடுத்துக் கொண்ட பங்களிப்பையும் கண்டு தேவனை ஸ்தோத்திரிக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்குள்ளே குற்றங்கள் உண்டு, குறைகள் உண்டு, பாவமும் உண்டு, ஆனாலும் ஒரே மெய்யான தெய்வத்தை இந்த உலகத்திற்கு காட்டவும் இவர்களுடைய ஒரே தெய்வம் என்ற கொள்கையில் உறுதியாக இருக்கவும், இவர்களுடைய முயற்சிகளையும் நாம் பார்க்க வேண்டும். நாமும் ஒன்றான மெய்தெய்வத்தை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டவர்களாக முதலாவதாக நம்மை சீர்ப்படுத்திக்கொண்டு உலகிற்கு மேசியாவை பரிசளிப்போம்.








காலச்சுவடு

# ஹென்றி டுனேன்ட்

## (1828-1910)

ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என்று அழைக்கப்படும் சுவிட்சர்லாந்து தேசத்திலுள்ள ஜெனிவா நகரத்தில் ஹென்றி டுனேன்ட், மே மாதம் 1828ஆம் ஆண்டு பிறந்தார். ஆறு வயதான இவர் சிறுவனாக இருக்கும்போது பிரான்ஸ் நாட்டிற்கு போய்வரும் பாக்கியம் பெற்றார். அச்சமயம் விலங்கு மாட்டப்பட்டு, தங்களுடைய குற்றத்திற்காக தண்டிக்கப்படும் சிறைகைதிகளை அவர் பார்க்க நேர்ந்தது. சமுதாயத்திலிருந்து விலக்கப்பட்டு, மிகவும் கடினமான கல் உடைக்கும் வேலையில் அவர்கள் ஈடுபட்டிருந்தது. அவரின் பிஞ்சு உள்ளத்தை உறுத்தியது. அந்த இடத்தைவிட்டு நகர்ந்து செல்லும்போது அவர் கூறிய வார்த்தைகள். நான் பெரியவனாகியதும், இவர்களை காப்பாற்றுவதற்காக இவர்களைப்பற்றி ஒரு புத்தகம் எழுதுவேன். இந்த கைதிகளின் பரிதாபமான நிலை அவர் மனதில் ஆழமாக பதிந்தது. இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டு, மானம் மரியாதையை இழந்து அவர்களின் குடும்பத்தை விட்டு பிரிந்து, மானிடப் பிறவியின் எவ்வித சந்தோஙகளையும் அனுபவிக்க முடியாத கைதிகளின் நிர்பந்த நிலை, வாழ்நாள் முழுவதும் அவரை வேதனைப்படுத்தியது. பதினான்காம் வயதில் எந்த திறமையும் அவரில் காணப்படவில்லை என்பதால், பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

### மனிதாபிமானம் உடையவர்:

18 வயது நிரம்பிய சமயம், மிகுந்த பக்தி உள்ளவராகவும், ஆழ்ந்த சிந்தனை உடையவராகவும் விளங்கினார். அவர் பெற்றோருடன் இந்நாட்களில் விழிப்படைந்தோர் திருச்சபையில் சேர்ந்து கடவுளை ஆராதித்து வந்தார். இந்த திரித்துவக் கொள்கை ஈகையில் சிறந்து விளங்க வேண்டும் என்பது, அதிகமாய் கிடைக்கப் பெற்றவர்கள், அதிகமாய் கொடுக்கவேண்டும், ஐக்கியம், ஒருவருடன் ஒருவர் இணைந்து செயலாற்றுதல், ஒருவரை ஒருவர் கனம் பண்ணுதல் ஆகிய இத்திருச்சபை கோட்பாடுகள் ஹென்றியை அதிகம் கவர்ந்தன. இதுவே அவருடைய வாழ்வின் அச்சாரமாக அமைய வேண்டும் என்று அவர் விரும்பினார். ஏழைகளின் மேல் அதிக கருணை கொண்டதினால் லீக் ஆப் ஆம்ஸ் (வீஜுள யிளழிஆற்ள லிக்ஷூ ழியிதுவி) என்ற சங்கத்தில் உறுப்பினராகவும் சேர்ந்து கொண்டார். அந்நகரத்தில் உள்ள சிறைச்சாலைக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சென்று, கைதிகளை சந்தித்து அவர்களுக்கு உதவி வந்தார். இரும்பு தழ்ப்பாள்களுக்குள்ளே முடங்கிக் கிடந்த சிறைவாசிகளுக்கு, புத்தகங்களை வாசிப்பது, ஆறுதல் வார்த்தை கூறுவது ஆகியவை, கைதிகள் அவர் வரவை எதிர் நோக்கிக் காத்திருக்க செய்தன.

### ஹென்றியும் கிறிஸ்துவ இளைஞர்களின் அமைப்பும்: (YMCA)

20 வயதிலேயே மிகவும் துடிப்பான இளைஞனாக ஹென்றி விளங்கினார். இளம் சுவிசேஷ ஊழியர்களை ஒன்று கூட்டினார். வாரம் ஒருமுறை அவருடைய வீட்டிலேயே அவர்களுக்கு கூட்டம் நடத்தினார். 1853 ஆம் ஆண்டில், வங்கி ஒன்றில் பணி செய்ய ஆரம்பித்து, திறமையாக பணி செய்தார். ஒய்.எம்.சி.ஏ என்ற நிறுவனம் லண்டனில் ஆரம்பிக்கப்பட உதவினார். மிக ஆர்வத்துடனும், துடிப்புடனும் செயல்பட்டார். ஆகவே, சிலரால் அவருடன் இணைந்து செயல்படுவது சிரமமாக இருந்தது. பல்வேறு நாட்டிலுள்ள புராட்டஸ்டன்ட் அமைப்புகளுடன் ஒத்துழைப்பு ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில், 1855ஆம் ஆண்டு உலகளாவிய கிறிஸ்தவ இளைஞர்களின் கூட்டமைப்பு (நிலிஷயி- ற்ஐஷிலிஐ லிக்ஷூ தீலிற்ஐஆ ளீஜுஷ்ஷிமிஷ்ழிஐ புவிவிலிஉஷ்ழிமிஷ்லிஜ) ஒன்று நிறுவப்பட்ட வேண்டும் என்று, ஒவ்வொரு வருடமும் எல்லா நாட்டின் பிரதிநிதிகளும், குறிப்பிட்ட ஒரு நாட்டில் கூட வேண்டும் என்று ஆலோசனை கூறினார். இவ்வாலோசனையின்படி முதலாவது உலக மாநாடு பிரான்சு நாட்டில் பாரீஸ் நகரத்தில் நடைபெற்றது. இன்று ஒய்.எம்.சி.ஏ உலகளாவிய ஸ்தாபனமாக விளங்குவதற்கு இந்த ஹென்றி மூலகாரணம். அந்த சட்ட, திட்டங்கள் வரையறையை செயல்படுவதிலும் பெரும் பங்கு வகித்தார்.




### சால்பெரினோ அனுபவம்:

ஒரு சமயம் அல்ஜீரிய நாட்டில் ஒரு விவசாய பண்ணையை அமைக்கவும், ஒரு ஆலை ஒன்றை உருவாக்கவும் அங்கு சென்றிருந்தார். இந்த ஆலைக்கு தேவையான தண்ணீரை பெற்றுக் கொள்வதற்கும் பிரான்சு நாட்டு அரசரிடம் அனுமதி வாங்கியாக வேண்டும். அச்சமயத்தில் பிரான்சு நாட்டு அரசர் இத்தாலி நாட்டுடன் போரிட்டுக் கொண்டிருந்தார். ஆகவே அரசரை சந்திக்க அனுமதி வாங்குவதற்கா சால்பெரினோ என்ற இடத்திற்கு ஹென்றி சென்றார். ஆனால் அங்கு நடந்து கொண்டிருந்த யுத்தத்தில் காயமடைந்தோரின் துயரத்தை கண்டு, தன் சொந்த காரியத்தை கைவிட்டுவிட்டு போரினால் காயமடைந்த ஆயிரக்கணக்கானோருக்கு மருத்துவ உதவி செய்யும்படியாக பேராசிரியரிடம் விண்ணப்பம் செய்யலானார். முட்டாள்தனமாக சண்டை போட்டுக்கொண்டு இருப்பவர்களைப் பார்த்து அதிர்ச்சியுற்றார். காயமடைந்தவர்களைப் பற்றி யாருக்கும் அக்கரையில்லை. போர் வெறி பிடித்தவர்கள், துப்பாக்கியின் பின்புறம் கொண்டு, எதிராளியை குத்திகொலை செய்து கொண்டிருந்தனர். காயமடைந்தவர்கள் வலியால் துடித்தனர். அவ்வாறு துடிப்பவர்கள் குடிப்பதற்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட அங்கு இல்லை. வெயில் கடுமையாக கொளுத்திக் கொண்டிருந்தது. தண்ணீர் இல்லாததே மிகவும் கொடூரமான காரியமாக தெரிந்தது. சிறு,சிறு குட்டைகளில் தண்ணீர் இருந்தபோதிலும், அவை இரத்தக் குருதியால் செந்நீராக காட்சியளித்தன.

## ஹென்றி பொறுப்பேற்றார்:

வேதனையில் துடித்து மாளும் வீரர்களை பார்த்து கொண்டு சும்மா இருக்க முடியவில்லை ஹென்றிக்கு. வியாதியுற்றவர்கள் மத்தியில் அவர் ஏற்கனவே பணி செய்தி ருந்த போதிலும், சல்பெரினோவில் அவர் கண்டகாட்சி முற்றிலும் வித்தியாசமாக இருந்தது. காயங்களினாலும் நா வறட்சியினாலும் வீரர்கள் துடியாய் துடித்தனர். காஸ்டிசிறியோன் என்ற ஒரு கிராமத்தில் ஹென்றி தன் பணியை ஆரம்பித்தார். காயமடைந்தவர்களில் 9000 பேர் அக்கிராமத்திற்கு கொண்டுவரப்பட்டனர். ஹென்றியின் முதல் வேலை அவர்களுக்கு தண்ணீரும், பேண்டேஜ் துணியும் கண்டுபிடிப்பது. பின் அவர்களின் காயங்களைக் கழுவி, பேண்டேஜ் பண்ணினார். இந்த காயமடைந்த வீரர்களை தங்கவைத்து கவனிப்பதற்கு ஒரு ஆலயத்தை கேட்டு பெற்றுக் கொண்டார். அதுவே அவரின் தலைமையகமாக மாறியது. அதற்குள் 500 சிப்பாய்கள் தங்கினர். நூற்றுக்கு மே லானோர் தெருவில் தங்கவைக்கப்பட்டனர். தனக்கு உதவியாக சிறுவர்களையும், பெண்களையும் நியமித்தார். தன்னால் முடிந்தவரை காயப்பட்டோருக்கு உதவினார். மரிக்கும் தருவாயில் இருக்கும் வீரர்களிடம் அவர்களின் கடைசி ஆசை என்ன என்று கேட்டு எழுதலானார். அவற்றை அவரின் பெற்றோருக்கும் அல்லது மனைவிக்கும் அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். மரித்துக் கொண்டிருக்கும் வீரர்களுக்கு இது மிகவும் ஆறுதலாக விளங்கியது. போரில் காயமடைந்தோர் படும் துயரத்தை நேரில் பார்த்த ஹென்றி, செஞ்சிலுவை சங்கத்தை நிறுவ உந்தப்பட்டார். இவ்வளவு பேர் மடிந்து சாகும் வேளையில் சிறிய எண்ணிக்கை கொண்ட தொண்டர்கள் என்ன செய்யமுடியும்? ஹென்றி ம லைத்து நின்றார். தன் மன முறிவை அவரால் மேற்கொள்ள முடியவில்லை. தான் கண்ட துயர காட்சியை புத்தகமாக சால்பெர்னோவின் நினைவுகள் என்ற தலைப்பில் எழுதினார்.

## உலகை மாற்றிய புத்தகம்:

இந்த புத்தகத்தில் அவர் கேட்டிருந்த கேள்வி சம ாதானம் நிலவும் காலத்தில் அர்ப்பணிப்பும், நல்ல திறமை பெற்ற தன்னார்வத் தொண்டர்களை ஒருங்கிணைத்து போர்க்களத்தில் காயப்பட்டோருக்கு உதவ முடியாதா? என்பது. இப்படி நிவாரண குழுக்களை அமைத்திருந்தால் சால்பெரினோவில் ஏற்பட்ட துயரத்தைப் எவ்வளவோ குறைத்திருக்க முடியுமே, தேவையெல் லாம் திடகாத்திரமான பயிற்சி பெற்ற தொண்டர்களே. இவர்களை ஒன்றினைக்க ஒரு நிறுவனம் தேவை.

## ஐந்து பேர் குழு:

நல்வாழ்வு சங்கத்தின் நான்கு அங்கத்தினர்கள் ஹென்றிக்கு உதவி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் சமுதாயத்தில் பிரபலமானவர்கள். ஐவர் குழு என்று இவர்களுக்குப் பெயர். இவர்களின் அயராத உழைப்பினால் செஞ்சிலுவை சங்கம் பல நாடுகளில் தோன்றியது.

## ஹென்றிக்கு சோதனைக் காலம்:

செஞ்சிலுவை சங்கத்தின் புகழ் கொடி கட்டி பறந்து கொண்டிருக்கும்போது, ஹென்றி தன் வாழ்வில் சரிவை சந்தி க்கலானார். செஞ்சிலுவை சங்கத்திற்காக உழைத்ததின் மூலம், தன்னுடைய சொந்த வியாபாரத்திற்கு அவரால் நேரம் கொடுக்கமுடியாமல் போய்விட்டது. இறுதியாக அவர் திவாலாகி விட்டார். பாரீஸில் ஒரு வாடகை அறையை எடுத்து அதில் தங்கியிருக்கலானார். எந்த ஆதரவும் இன்றி, குடும்பத்தை விட்டு பிரிந்து, வருங்காலத்தை பற்றிய நம்பிக்கையின்றி வாழலானார்.

1867-ஆம் வருட கோடை காலத்தில் நெப்போலியன் ஒரு கண்காட்சியை பாரிசில் நடத்தினார். செஞ்சிலுவை நிறுவனத்தின் பொருட்களும் அக்கண்காட்சியில் இடம் பெற்றன. அதில் ஒன்று செஞ்சிலுவை சங்கத்தை நிறுவிய ஹென்றியின் நெஞ்சளவிலான சிலை. அச்சிலையின் தலையில் வெற்றிவாகை சூட்டிய மகுடம். இதைப்பார்த்த ஹென்றிதான் தற்போது இருக்கும் பரிதாப நிலைக்கு அச்சிலை பொருத்தமற்றது என்று உணர்ந்து, அச்சிலையை அங்கிருந்து அகற்றும்படி செய்தார். என்ற போதி லும், ஹென்றியின் புகழ் பரவ ஆரம்பித்தது. அரசாங்கமும் அவருடைய பொதுநல தொண்டினைப் பாராட்டி வெகுமதிகள் கொடுத்தது. பல நாடுகள் தங்கள் செஞ்சிலுவை சங்கத்தின் தலைவராக அவரை நியமித்தன. ஒவ்வொரு பரிசும் கௌரவமும் அவரை மகிழ்வித்தன. இவற்றின் மூலம் தான் பட்டிருந்த பெரிய கடன் தொகைகளையும் ஹென்றி கட்டி முடித்தார்.

## மீண்டும் தரித்திரம்:

ஆனாலும் அதி சீக்கிரத்தில் உலகம் அவரை மறந்தது. அவருடைய கருத்துக்கள் எல்லாம் எதிர்கால தரிசனமாக இருந்தன. அவை பிற்காலத்தில் செயலாக்கமும் பெற்றன. விந்தையென்னவெனில், ஹென்றி இல்லாமல் அவை நிறைவேறின.

16 வருடங்கள் மிகவும் சோதனையின் ஆண்டுகள். யாராலும் அறியப்படாதவர் போல் ஹெய்டன் என்ற இடத்தில் தனிமை யிலும் தரித்திரத்திலும் உழன்றார். இப்படி காலம் உருண்டோட, ஒரு நாள் ஒரு இளைஞன் அவரை சந்திக்க வந்தார். அவர் பெயர் பாம் பொ்ஜர். இந்த மனிதர் ஹென்றியின் சாதனையை கேள்விப்பட்ட மிகவும் பரவசமடைந்திருந்தார். ஹென்றியை சந்தித்தபின் அவரைப் பற்றி ஒரு கட்டுரையை பாம் போர்ஜர் பிரசுரித்தார். அந்த கட்டுரையை படித்த இப்படி ஒரு ம னிதன் வாழ்கிறாரா? என்று ஆச்சரியமடைந்தனர். ஏராளம ான கடிதங்கள் ஹென்றிக்கு வர ஆரம்பித்தன. அவரின் பழைய நண்பர்களும் அவரை வந்து சந்தித்தனர். நிறைய நன்கொடைகளும் வந்தது. துயரத்தை ஆழமாக அழுத்தி தன் அத்தனை பணத்தையும் வங்கியில் சேமித்தார். பிரான்சு நாட்டு அரசன் நெப்போலியன் அவருக்கு கடிதம் எழுதி னார். ஆனால் அது அவரை வந்து சேரவில்லை. அந்த கடிதத்தில் ஹென்றியின் பாதிக்கடனை கட்டிவிடுவதாக அவர் குறிப்பிட்டிருந்தாராம். உலகம் எங்குமுள்ள செஞ்சிலுவை சங்கங்களிலிருந்தும் பாராட்டு கடிதங்கள் வந்து குவிந்தன.

## நோபல் பரிசு:

உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது. சமாதானத்திற்கென்று வழங்கப்படும் முதல் நோபல் பரிசு அவருக்குக் கொடுக்கபட்டது. அந்தப் பணத்தை அவர் உபயோகித்தவில்லை. தர்ம காரியங்களுக்குகென்று என்றே பிரித்தளித்துவிட்டார். ஜெனீவா நகரில் பிறந்து ம ாபெரும் தரிசனத்தோடு வாழ்ந்த இந்த மனிதர் அக்டோபர் 30, 1910அன்று மரணமடைந்தார். அவரையும் மிஞ்சிய தரிசனத்தில் அவர் வாழ்ந்தார். இந்த மனிதனின் தரிசனத்தில் உருவான செஞ்சிலுவை சங்கம் இன்று உலகமெங்கும் வளர்ந்திருக்கிறது. யுத்தத்தினாலோ, இயற்கை சீற்றத்தினாலோ பாதிப்புகள் உலகில் எந்த பகுதியில் இருந்தாலும் உடனே அங்கு விரைந்து சென்ற நிவாரணப் பணியில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பாற்றுகின்றனர். நாமும் நம்முடைய வாழ்வில் இப்படி தேவையுள்ள மனிதர்களுக்கு உதவலாமே! ஜெபிப்போம்! செயல்படுவோம்!!

Mrs.Mary







# கிறிஸ்துவின் பிறப்பில்

இந்த நான்காவது வார செய்தியில் பன்னிரெண்டு கோத்திரப்பிதாக்களின் குடும்பத்திற்குள் ஒரு சில பெண்களின் பங்களிப்பையும், இவர்கள் மேசியாவை உலகிற்கு கொடுக்க எடுத்த பிராயசங்களையும் சுருக்கம ாக கற்று இந்த பண்டிகையின் நாட்களை சந்தோ-த்தோடு கொண்டாடுவோம். இதில் ஒருசில குறிப்புகள் அடைப்புக்குள்( ) சொல்லுகிறோம். அது யூத வரலாற்றில் இடம்பெற்ற சரித்திர குறிப்புகளாகும். ஒரு சிலர் அதை புனைக்கதைகள் என்று கூறுகின்றனர். ஆனால் ஒன்று வேதத்தில் நேரடியாக சொல்லப்படாத காரியங்கள் அதையும் சேர்த்து நாங்கள் தருகிறோம். சத்தியத்தில் உள்ளவைகளை மட்டும் எடுத்துக் கொண்டு நாம் பயணிப்போம்.

## தெபோராள்:

ஆதி 35:8 ரெபெக்காளின் தாதியாகிய தெபொராள் மரித்து, பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள்; அதற்கு அல்லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று . இந்த தெபோராள் யாக்கோபு தன் மாமனாகிய லாபான் வீட்டுக்கு போனபின்பு ரெபேக்காள் யாக்கோபின் பிள்ளைகளை இந்த எபிரேய கலாச்சாரத்தில் வளர்க்கும்படியாக தனது தம்பி லாபான் வீட்டிற்கு அனுப்பி வைத்த நபர் ஆவாள். இவள்தான் ஏசா, யாக்கோபையும் குழந்தை பருவத்தில் வளர்த்தவள். இவளே தன் பேரப்பிள்ளைகளையும் மெய்ம ார்க்கத்தில் வளர்க்க தகுதியானவள் என்பதை உணர்ந்த ரெபேக்காள் அவளையும் யாக்கோபிற்கு பிறகு தன் தம்பி வீட்டிற்கு அனுப்பிவைக்கிறாள். இவளே யாக்கோபின்

11 குமாரர்களையும் வளர்த்த தாய். இவள் மரித்ததை வேதத்தில் ஆவியானவர் பதிவு செய்திருப்பதை நாம் பார்க்க முடிகிறது.

## தாமார்:

நாம் ஏற்கனேவே கற்றுக்கொண்டது போல் ரூபன், சிமியோன், லேவி இவர்கள் மூவரும் சேஷ்டபுத்திர ஆசீர்வாதத்தை இழந்த பின்பு சேஷ்டபுத்திரபாகத்தை பெற்ற யூதாவும் தனது திருமண வாழ்க்கையில் தவறான முடிவை எடுத்து புறஜாதிப்பெண்ணை ம ணம் செய்துகொள்கிறான். யூதாவிற்கு இரண்டு ஆண்பிள்ளைகள் பிறக்கிறார்கள். இதில் மூத்த மகனுக்கு மனைவியாக நியமிக்கப்பட்டவள்தான் இந்த தாமார். இவன் பொல்லாதவன் என்று வேதம் சொல்லுகிறது. பின்பு தாம ார் யூதாவின் இரண்டாவது குமாரனுக்கு கொடுக்கப்பட்டாள். அவனும் பொல்லாத காரியத்தை செய்ததினிமித்தம் தேவனால் அடிக்கப்பட்டான். பின்பு தாமார் தன் பெற்றோர் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படுகிறாள். யூதாவை குறித்ததீர்க்க தரிசனமோ யூதாவிலே ஒரு விடிவெள்ளி உதிக்கும் என்பதே. அதாவது யூதா கோத்திரத்தில் மே சியாவாக கிறிஸ்து பிறப்பார் என்பதே. மேலும் யூதா ஒரு பெரிய குடும்பத்தில் சேஷ்டப்புத்திர ஆசீர்வாதத்தை பெற்றவன். இவைகளை அறிந்த தாமார் தன் தகப்பன் வீட்டிற்கு சென்று மறுமணம் செய்துகொள்ளாமல், வேசியின் ஆடைகளை அணிந்து வேமாறினவளாய் தன் மாமனாரிடத்தில் சேர்ந்து, பிள்ளை பெறுகிறாள். இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவள் வேசியாக மாறவில்லை. வேசியாக வேம் போட்டாள் என்பதே. இவளுடைய துணிச்சலை தைரியத்தை ஆசீர்வாதத்தின் சந்ததியை பெற்றெடுக்க வேண்டுமென்ற குறிக்கோளை நாம் பார்க்க வேண்டும். இது நாம் நினைத்தது போல ஒரு சாதாரண காரியமல்ல. நம் சிந்தைக்கு எட்டாத செயல். பின்வரும்நாட்களில் யூதாவின் வார்த்தைகளை வைத்து பார்க்கும் பொழுது, அன்றைய தினத்தில் வேசியாக கண்டுபிடிக்கப்பட்டாள். கல்லெறிந்து கொல்லுவார்கள் அல்லது சுட்டெரித்து போடுவார்கள். கையும்களவும ாக பிடிபட்டால் இந்த தண்டனை கிடைக்கும் என்பதை அறிந்தும் அவள் எடுத்த முடிவினால்தான் இந்த சந்ததியில் கிறிஸ்துவும் பிறந்தார். யூதாவின் இரண்டு பிள்ளைகள் மூலமாக இந்த சந்ததி தொடர வாய்ப்பில்லை. காரணம் அவன் மனைவி புறஜாதிப்பெண் இந்த தாம ாளின் வழியாக பரிசுத்த சந்ததி தொடர்கிறது. இதை கணம் பண்ணவே தேவன் இவளுடைய பெயரை தனது சந்ததியில் கொண்டுவந்து மத் 1ஆம் அதிகாரத்தில் இவள் பெயரும் வரும்படியாக எழுதி வைத்திருக்கிறாள். மத் 1:3 யூதா பாரேசையும், சாராவையும் தாமாரிடத்தில் பெற்றான்; பாரேஸ் எஸ்ரோமைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராரமைப் பெற்றான் கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் முற்பிதாக்களின் மனைவியாகிய சாராள், ரெபேக்காள், ராகேல், லேயாள் இவர்கள் பெயர் இடம் பெறவில்லை. இவர்கள் அனைவரும் நல்லவர்கள்தான். ஆனாலும் தாமாரின் பெயர் வர காரணம் கிறிஸ்து பிறப்பிற்கு ஒரு சந்ததியை உருவாக்கி கொடுத்தாள் என்பதற்காகவே.

## தீனாள்:

சகோதரர்கள் நடுவே பிறந்த ஒரு சகோதரி இந்த தீனாள். இவள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டது. இதன் விளைவாக அவர்களது இரண்டு சகோதரர்கள் கொலையாளியாக மாறினது. இவைகளையெல்லாம் வேதத்தில் நாம் படித்திருக்கிறோம். (இந்த தீனாளின் மூலம்



# கோத்திரங்களின் பெண்கள்

பிறந்த குழந்தை ஒரு பெண் குழந்தையென்றும் அவளை வர்த்தகம் செய்த வர்த்தகர்களிடம் கொடுத்துவிட்டதையும் அவர்கள் அந்த குழந்தையை ஒரு ஆசாரியனிடம் விற்றார்கள் என்பதையும் அந்த ஆசாரியன் பெயர்தான் போர்த்திபரா இந்த ஆசாரியன் அவளை எபிரேய கலாச்சார முறையில் ஒரே மெய்யான தெய்வத்தை வணங்க பழக்குவித்திருக்கிறான். இவளை தான் பார்வோன் யோசேப்புக்கு மணம்முடித்தான் என்பது) இந்த ஆஸ்நாத் யோசேப்புக்கு எகிப்துக்கு பஞ்சகாலத்திற்கு முன்பதாகவே இரண்டு குமாரர்களை பெற்றெடுக்கிறாள். இந்த இரண்டு குமாரர்களும் யாக்கோபின் மூலம் யாக்கோபின் குமாரர்களாக மாறி இஸ்ரவேலின் 12 கோத்திரங்களுக்குள் இடம் பெறுகின்றனர். யாக்கோபின் ஆசீர்வாதத்தின்படி ஜனங்கள் இன்றும் எப்பிராயீம், மனாசேயை போல தேவன் வாழச்செய்வாராக என்று ஆண்மக்களை வாழ்த்துகின்றனர். இப்படி வாழ்த்த காரணம் எகிப்தின் விக்கிரகங்களின் மத்தியிலேயும் பாவம் பெருகின இடத்திலேயும் தங்களை தீட்டுப்படுத்தாமல் எப்பிராயீம் மனாசேயை வளர்த்த யோசேப்பும், ஆஸ்நாத்துமே. மேலும் அந்த கொள்கையில் வளர ஆஸ்நாத் ஏற்கனவே பழக்கப்பட்டிருந்தாள்.

## ராகேல், லேயாள்:

யாக்கோபின் மனைவிகளாகிய லேயாள், ராகேல் இவர்களின் பங்கு மிக முக்கியமானது. ரூத் புத்தகத்தில் ஜனங்கள் ரூத்தை வாழ்த்தும் பொழுது, இஸ்ரவேலை வீட்டை கட்டுவித்த ராகேலை போலவும், லேயாளைப்போலவும் வாழ்ந்திருக்க செய்வாராக (ரூத் 4:11) என்று வாழ்தினார்கள். இன்றும் இஸ்ரவேலிலே பெண்பிள்ளைகளை வாழ்த்த இந்த வாக்கியத்தை தான் பயன்படுத்துகிறார்கள். இதன் மூலம் முழு இஸ்ரவேல் குடும்பத்தையும் கட்டுவித்தவர்கள் இந்த இரண்டு ஸ்திரீகள் என்பது புலனாகிறது.

ராகேல் தனது கடைசி மகனை பெற்றெடுத்து கானானுக்கு வெளியே மரணமடைகிறாள். (அவள் மரித்த பின்பு யாக்கோபு அவளுடைய பிரேதத்தை 13 முறை முத்தம் செய்து அவன் சொன்ன வார்த்தைகள்தான் கடவுளை குறித்து அவன் சொன்ன 13 கூற்றுகளாகும்) இந்த வார்த்தையை தான் மோசே சொன்னதாக வேதத்திலே நாம் வாசிக்கிறோம். யாத் 34:6,7 கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்துபோகிறபோது, அவர்: கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்று கூறினார் . பின்பு யாக்கோபு ஒரு நினைவு தூணை கட்டினான் என்று பார்க்கிறோம். இந்த இடத்தில்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்பு கிறிஸ்து என்னும் மேசியா பிறந்தார்.

லேயாளைக்குறித்த ஒரு உண்மையையும் இப்பொழுது பார்ப்போம். யாக்கோபு லேயாள் மரித்தபின்பு ஆபிரகாம் சாராள், ஈசாக்கு, ரேபெக்காள் வைத்த கல்லறையில் லேயாளை அடக்கம் பண்ணினதாகவும் அங்கே தான் மரித்தபின்பு லேயாள் அருகில் அடக்கம் பண்ணும் படியாக தன் பிள்ளைகளுக்கு கட்டளையிட்டான். இவள் முற்பிதாக்களின் கல்லறைக்குகையில் இடம் பெற்றவள்.

நோவாவின் மூன்று புத்திரர்களில் சேம் சந்தியை தேவன் தெரிந்தெடுக்க காரணம் அவர்கள் பாபேல் கோபுரம் கட்ட முன்வராதது. அந்த சந்ததியில் ஆபிரகாமை பேர் சொல்லி அழைத்து, ஈசாக்கு, யாக்கோபு, யூதா... ஓபேத், ஈசாய், தாவீது... கிறிஸ்து. இந்த மேசியாவாகிய கிறிஸ்து உலகத்தில் மனிதனாக பிறக்க பல்வேறு இன்னல்கள், சாத்தானின் போராட்டங்கள், தடைகள் வந்தபோதிலும் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மேசியாவை உலகுக்கு கொடுத்த ஸ்தீரிகளின் பங்கு சொல்லிமுடியாதது. வேதத்தில் ஆங்காங்கே பெயர்கள் உள்ள நபர்களோ அல்லது பெயர்கள் இல்லாத மறைமுகமான நபர்களோ இடம் பெற்றிருக்கும். இவைகள் அனைத்துமே ஒரு செயலை வைத்து நம் கால கண்ணோட்டத்தோடு முடிவு செய்ய கூடாது. இவைகள் அனைத்துமே ஞான அர்த்தங்கள் கொண்டவை. வேதத்தில் பெண் அடிமை என்பது இல்லை. இதோடு சேர்ந்து புரிந்து கொள்ள வேண்டியது பெண் உரிமை தேவையில்லை என்பது. ஆனால் அவர்களுகென்று வரையறுக்கப்பட்ட கடமைகள் உள்ளது. இதை புரிந்து கைக்கொண்டு மேசியாவை உலகிற்கு காட்டவே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

இந்த கிறிஸ்மஸ் பண்டிகை மேசியாவை உலகிற்கு காட்டும் நாளாக அமைய உங்களை வாழ்த்துகிறோம். வருகிற கிறிஸ்து ஜனனம் சமத்துவம் நிறைந்ததாகவும் பாவ இச்சைகள் ஒழிந்த நாளாகவும் மகிழ்ச்சி பொங்கும் நாளாகவும், அமைய தேவன் கிருபை செய்வாராக.



# கிறிஸ்துமஸ் சிலுவைகள்

கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்ட நாட்களில் பிரபலமானவை. கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள், கிறிஸ்துமஸ் பாடல் பவனிகள், கிறிஸ்துமஸ் மெழுகுவர்த்திகள், கிறிஸ்துமஸ் கேக் விற்பனைகள், பாடல்கள், போட்டிகள் முதலியன. ஆனால் எனது சமீபத்திய வேதத் தியானம் ஒன்றில் கிறிஸ்துமஸ் சிலுவைகளைக் கண்டேன். இது விகற்பமாய்த் தோன்றலாம். ஆனால் இதுதான் கிறிஸ்துமஸின் மறுப்பக்கம். இது இல்லையேல் ஒட்டுமொத்த விளக்கம் நமக்குக் கிடையாது. கிறிஸ்மஸ் சரிதை விளக்கப்பட்டுள்ள வேத பகுதிகள் மத்தேயு 1 &2, லூக்கா 1 & 2.

## ஐந்து சிலுவைகள்:

### 1. இன்பம் இல்லாத கர்ப்பம்:

திருமணமாகிய இளம் பெண்ணுக்குக் கர்ப்பம் ஒரு பெருமிதம். புகைப்படங்கள், பாராட்டுக்கள், விழாக்கள் நிறைந்திருக்கும். ஆனால் மரியாளின் கர்ப்பமோ வினோதமான கேள்விக்குரியது. சமூகத்தில் அவமானம் (மத் 1:18,19) இதுபோல் நடந்ததில்லை. மரியாளின் சூழ்நிலையை போல் இந்நாட்களிலும் தேவன் நமக்குப் பல ஆசீர்வாதங்களைத் தந்திருந்தும், அவற்றைப் பல சமயங்களில் இயல்பாய் அனுபவிக்க முடியாதிருக்கிறோம். பெரும்பான்மையினர் அனுபவிக்கும் நியாயமான இன்பங்கள் கூட நமக்கு எட்டுவதில்லை. ஆனாலும் இவ்விதச் சூழலைக் கர்த்தரிடம் ஒப்படைத்தால், அதன்விளைவு விளங்க முடியாத ஆசீர்வாதமாயிருக்கும்.

### 2. வசதிகள் இல்லாத பிரசவம்:

நாசரேத்திலிருந்து (கலிலேயா) பெத்லகேமுக்கு (யூதேயா) பயணம் லூக் 2:1-5 ...50 மைல்களுக்குக் கூடுதல் தூரம். 400 ஆண்டுகள் அமைதியாயிருந்த தேவன் மரியாள் கருத்தரிப்பதை ஒரு சில மாதங்கள் தள்ளிப்போடச் செய்திருக்க முடியாதா? முழுக் கர்ப்பிணியாய் இருந்தாள். துவக்க மாதங்களென்றாலும் பரவாயில்லாமல் இருந்திருக்கும் (லூக் 2:6) என்று கூட நாம் சிந்தித்திருக்கலாம். தேவகுமாரன் உருவாக ஒரு கருவறையைத் தேவன் ஆயத்தம் பண்ணினார். அவர் பிறக்க ஒரு பிரசவ அறையை ஆயத்தம் பண்ண முடியாதா? சத்திரத்தில் இடமில்லை (லூக் 2:7). கிறிஸ்துவின் கடினமான வாழ்க்கைக்கு ஓர் ஆயத்தம். இளம் பிராயத்தில் நுகம் சுமப்பது நல்லது (புல 3:27) தேவனே அதைத் தன்மீது வைத்தார்! (வச 28) 33 வயதில் சிலுவை சுமந்தார். எளியவரோடு தம்மை அடையாளப்படுத்துவது இயேசுவுக்கு எளிதாயிற்று. அநேகரை செல்வந்தராக்கும் படிக்கு அவர் தாமே தரித்திரரானார் (2 கொரி 6:10). வசதிகள் உங்களை வசதியாயிருக்கச் செய்துவிடாது. காலே இல்லாத ஒருவனைப் பார்க்கும் வரை எனக்குப் புது காலணிகள் இல்லையே என முறுமுறுத்தேன் . எளிய வாழ்க்கை முறை உயரிய சிந்தனைக்கு வழிவகுக்கும்.

### 3. கீர்த்தி இல்லாத வம்சம்:

யூத வம்ச வரலாறுகளில் பெண்கள் பெயர்கள் இடம் பெறுவதில்லை; ஆனால் மத்தேயு 4 பெண்களைக் குறிப்பிடுகிறார். அதில் இருவர் நடத்தைக் கேடுள்ளோர். 1. ராகாப் (மத் 1:5) - வேசி, 2. பத்சேபாள் (மத் 1:6) - அரசனது அழுத்தத்திற்கு இணங்கியவள், அவளது பெயர் கூட சொல்லப்படவில்லை. உரியாவின் மனைவியிடம் பிறந்த சாலொமோன் . இயேசு பெத்லகேமில் பிறந்தார். இந்த பெத்லகேம் யூதாவின் 1000 பட்டணங்களில் சிறியதாகும் (மீகா 5:2, மத் 2:6). நாசரேத்தில் வளர்ந்தார் (மத் 2:23). நாசரேத்திலிருந்து நன்மையா? தங்கள் இடம் இனம் குறித்து மார் தட்டுவோருண்டு. உங்கள் எளிய பின்னணியைக் குறித்து கலக்கமா? தேவன் தாழ்மையானவர்களை உயர்த்தினார் (லூக் 1:48,52). அந்தஸ்து, அருகதை இல்லாதோரை தேவன் அழைக்கிறார் (1 கொரி 26-29). இயேசு அவர்களுக்கு எல்லாமுமாகிவிடுகிறார் (வச 30) எல்லாம் இயேசுவே!. இயேசுவின் பொருளாதார நிலையை பார்க்கும்பொழுது மரியாள் ஆட்டுக்குட்டியல்ல, புறா குஞ்சுகளையே பலிக்காக கொண்டுவர முடிந்தது(லேவி 12:8). யோசேப்பு தச்சனாக இருந்தபடியால் இயேசுவும் தச்சனாக அழைக்கப்பட்டார். இயேசு தம்மைத்தாமே தாழ்த்தினார்.... தேவன் உயர்த்தினார். எனவே கிறிஸ்துவிலிருந்த இந்த சிந்தையே நம்மிலிருக்கட்டும். (பிலி 2:5-9).

### 4. அற்புதங்கள் இல்லாத தேவதூதர்:

கிறிஸ்துமஸ் சரிதையில் தூதர்களின் பங்கு மிக முக்கியம். தமது மக்களுக்குத் தேவன் ஆற்றும் பணிகளே தேவதூதர்களின் சந்திப்புகளாகும். தூதர்கள் என்றால் இரட்சிப்பைச் சுதந்தரிப்போருக்குப் பணிவிடை ஆவிகள் என எபி 1:14ல் வாசிக்கிறோம். தூதன் சொன்னது அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீங்கி அவர்களை இரட்சிப்பார் (மத் 1:21). இயேசு தேவனே நமது இரட்சிப்பு என்று கர்த்தராலே உரைக்கப்பட்டது தீர்க்கன் மூலமாய் நிறைவேறிற்று. இம்மானுவேல் .... தேவன் நம்மோடு (வசன 23) இருந்தால் எகிப்திற்கும் கலிலேயாவுக்கும் யோசேப்பு ஓடுவானேன்? மத் 2:13(ஏரோது), 2:22 (ஏரோதின் மகன்) ஆணுதவியின்றிக் கன்னி வயிற்றில் கருவைத் தேவனால் விதைக்க முடியுமானால், ராஜாவின் கைகளுக்கு அந்த சிசுவை தப்புவிக்க முடியாதா, என்ன? கைக்குழந்தையோடு அங்குமிங்கும் ஓடுவது சுலபமா? இதில் சத்தியம் என்னவென்றால் தேவன் எப்பொழுதுமே அற்புதங்கள் செய்துவிடுவதில்லை; தமது ஆதினத் திட்டத்தின் படியே செய்வார். அற்புதம் இல்லாது தேவன் நம்மை நடத்துவாரெனில், அதுதான் பெரிய அற்புதம்! தேவச்செயல்கள் எப்பொழுதுமே கவர்ச்சியாயிருக்க அவசியமில்லை. நாம் உணர்ந்தாலும், உணராவிட்டாலும் தேவன் நம்மோடுதான்! தேவன் தந்த நிகரற்ற அற்புதம் இயேசுவே! நம்மோடு இயேசு இருந்தால், தேவனது யாவும் நமதே. சொந்தக் குமாரனையே ஒப்புக்கொடுத்தவர். (ரோமர் 8:32). ஜான் வெஸ்லி அவர்கள் கூறும்பொழுது, தேவன் நம்மோடு இருப்பது அதுதான் பெரிய காரியம்! என்கிறார்.

### 5. குதூகலம் இல்லாத சந்தோஷம்:

மிகுந்த சந்தோம் உண்டாக்கும் நற்செய்தி என்றே கிறிஸ்து பிறந்த செய்தி மேய்ப்பருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் பிறந்து 8ஆம் நாளில் கூறப்பட்ட ஆசீர்வாத வார்த்தைகளில் மரியாளின் நெஞ்சைப்பிளக்கும் ஒரு கூற்று, “பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, ... இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்” (லூக் 2:34,35). ஆசாரியனிடமிருந்து வந்த இவ்வார்த்தைகள் ஒரு தாய்க்கு எப்படியிருந்திருக்கும்? ஆயிரமாயிரமான குற்றமில்லாப் பாலகர் மரணம் (மத் 2:16-18) அந்த பாலகர்களின் தாய்மார்கள் மரியாளைப்பற்றி என்ன பேசியிருப்பார்கள்? “ஆணின்றிக் கருத்தரித்தவள்; இப்பொழுது நியாயமாய்ப் பிறந்த எங்கள் பிள்ளைகள் மரணத்திற்கு காரணமாகிவிட்டாளே!” பிள்ளையை இழப்பதென்றாலென்ன? என இயேசுவுக்கு தெரியும். தமது தாய்க்கு முன்னால்தானே துடி, துடித்து மரித்தார்! அவர் பாடுபட்டதினால் பாடுபடுவோர்க்கு உதவ வல்லவராயிருக்கிறார். அவர் பெயரே “தேற்றரவாளன்” என்பதுதான். அவரது ஆவியானவரின் பெயர் “இன்னொரு தேற்றரவாளன்” .

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் குறித்துப் பேசும் இவ்வேளையில், உங்களைக் குத்திக்கொண்டிருக்கும் முட்கள் யாவை? உங்களை நசுக்கிக் கொண்டிருக்கும் சிலுவைகள்தான் எவை? இந்த உலகில் உனக்கு நியாயமான இன்பங்களும் கிடைக்கவில்லையோ? வாழ்வில் பாதகங்கள் நிறைந்துள்ளனவோ? எளிமையான சமுதாய அந்தஸ்து உடையவனென்று உன்னையே நினைத்து கொள்கிறாயோ? பாடுகளோடுதான் கிறிஸ்துமஸ் நாட்களை கழிக்க வேண்டுமோ என்று தயங்குகிறாயோ? நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை நம் இயேசு அறிந்திருக்கிறார். மேலே வாசித்ததுபோல கிறிஸ்து பிறப்பின் போதே ஐந்து விதமான சிலுவையை சுமந்ததின் விளைவாக, எளியவரோடு தம்மை அடையாளப்படுத்திக்கொள்வது எளிதாயிருந்தது, பலவிதமான நுகத்தை சுமக்கும் நம்மைப் போன்றவரை அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய ஏற்புடையதாயிருக்கிறது, கிறிஸ்து அவரின் சிலுவை மரணத்தின் போது, பிதா அவரை மேன்மைபடுத்துவதற்கு வழிவகுத்தது. எனவே நாமும் இவ்வுலகத்தில் சிலுவை என்று எண்ணி சுமக்கும் காரியத்தில் இம்மானுவேல் என்ற நாமத்தை உடைய கிறிஸ்து நம்மோடு இருப்பதனால் வெட்கப்படாமல் மேன்மைபடுத்தப்படுவோம் என்ற நிச்சயத்தோடு இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம்முடைய எல்லா சூழ்நிலைகளையும் கர்த்தரிடம் ஒப்படைத்தால், அதன்விளைவு விளங்க முடியாத ஆசீர்வாதமாயிருக்கும்.

YOUTH & TEENS WING

fmpb youth wing

# DEC 2021

| SUNDAY | MONDAY | TUESDAY | WEDNESDAY | THURSDAY | FRIDAY | SATURDAY |
|---|---|---|---|---|---|---|
| | | | **DEUTERONOMY - BACKWARD (LESSONS FROM THE PAST) - THE OBEDIENT LIFE** | | | |
| | | | **01**<br>8<br>An exhortation to obedience | **02**<br>9<br>Moses dissuades of their righteousness | **03**<br>10<br>God's mercy | **04**<br>11<br>An exhortation to obedience |
| | | | *ISAIAH : OT BACKGROUND - JUDGMENT IS COMING (SERMONS OF CONDEMNATION) -1-39* | | | |
| | | | Visions-Judgment on Judah (1-12)<br>1-3 | Visions-Judgment on Judah (1-12)<br>4-6 | Visions-Judgment on Judah (1-12)<br>7-9 | Visions-Judgment on Judah (1-12)<br>10-12 |
| | **DEUTERONOMY - INWARD (LESSONS FOR THE FUTURE) - THE ORDERLY LIFE - RELIGIOUS LAWS** | | | | | |
| **05**<br>**Witnesses of the Lamb**<br>Revelation 1-3 | **06**<br>12:1-16<br>Monuments of idolatry are to be destroyed | **07**<br>12:17-32<br>Holy things | **08**<br>13<br>Enticers to idolatry; | **09**<br>14<br>What may, and what may not be eaten; | **10**<br>15<br>The seventh year a year of release | **11**<br>16<br>The feast |
| | *ISAIAH : OT BACKGROUND - JUDGMENT IS COMING (SERMONS OF CONDEMNATION) -1-39* | | | | | |
| | Burdens -Judgment on Judah's Neighbours (13-27)<br>13-15 | Burdens -Judgment on Judah's Neighbours (13-27)<br>16-20 | Burdens -Judgment on Judah's Neighbours (13-27)<br>21-24 | Burdens -Judgment on Judah's Neighbours (13-27)<br>25-27 | Woes - Judgment on all the earth (28-35)<br>28-31 | Woes - Judgment on all the earth (28-35)<br>32-35 |
| | **DEUTERONOMY - INWARD (LESSONS FOR THE FUTURE) - THE ORDERLY LIFE** | | | | | |
| **12**<br>**Worship of the Lamb**<br>Revelation 4-5 | **13**<br>17:1-11<br>The things sacrificed must be sound | **14**<br>17:12-20<br>The contemner of that determination must die. | **15**<br>18:1-14<br>The LORD is the priests and Levites' inheritance. | **16**<br>18:15-22<br>Christ the Prophet is to be heard. | **17**<br>19<br>The cities of refuge. | **18**<br>20<br>To encourage the people to battle. |
| | ISAIAH : PARENTHESIS | | | NT BACKGROUND - GLORY WILL FOLLOW (SERMONS OF COMFORT ) - 40-66 | | |
| | Wars - Historical Interlude (36-39)<br>36-37 | Wars - Historical Interlude (36-39)<br>38 | Wars - Historical Interlude (36-39)<br>39 | Worship - Deliverance of God's people (40-48)<br>40-43 | Worship - Deliverance of God's people (40-48)<br>44-46 | Worship - Deliverance of God's people (40-48)<br>47-48 |
| | **DEUTERONOMY - INWARD (LESSONS FOR THE FUTURE) - THE ORDERLY LIFE** | | | | | |
| **19**<br>**Wrath & Whole reign of the Lamb**<br>Revelation 6-19 & 20 | **20**<br>21<br>The expiation of an uncertain murder. | **21**<br>22<br>Humanity towards brethren. | **22**<br>23<br>Who may or may not enter into the congregation. | **23**<br>24<br>divorce, leprosy, Of justice | **24**<br>25<br>Stripes must not exceed forty, immodest woman | **25**<br>26<br>The confession of him that offers the basket of first-fruits. |
| | *ISAIAH : NT BACKGROUND - GLORY WILL FOLLOW (SERMONS OF COMFORT ) - 40-66* | | | | | |
| | Deiverance for God's People (49-57)<br>49-51 | Deiverance for God's People (49-57)<br>52-54 | Deiverance for God's People (49-57)<br>55-57 | Future of God's Delivered People (58-66)<br>58-60 | Future of God's Delivered People (58-66)<br>61-63 | Future of God's Delivered People (58-66)<br>64-66 |
| | **UPWARD (LESSONS OF A LEADER)- ONE MAN'S LIFE** | | | | | |
| **26**<br>**Wedding of the Lamb**<br>Revelation 21-22 | **27**<br>27<br>The people are commanded to write the law upon stones, | **28**<br>28-29<br>The blessings for obedience. | **29**<br>30<br>Great mercies promised unto the penitent. | **30**<br>31-32<br>Moses encourages the people. | **31**<br>33-34<br>The majesty of God. | |
| | *MALACHI: QUESTIONS & ANSWER* | | *INVITATION & WARNINGS* | | | |
| | Sins of the Priests<br>1 | Sins of the People<br>2 | Payday for the People<br>3 | Coming day of the Lord<br>4 | Coming day of the Lord<br>5 | |

**FMPB YOUTH & TEENS WING**



# தேவை!

## அவசர அழைப்பு

இயேசு கிறிஸ்து என்றால் யார்
என்று கேள்விப்படாத
நம் இந்தியர்களுக்கு
கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச்
சுமந்து செல்லும்
இம்மாபெரும் தேவையை
நிறைவு செய்ய
பெண்களாகிய
நீங்களும் முன்வரலாமே!

இயேசுவின் இறுதி வருகையின்
முன் அடையாளங்கள் யாவும்
விண்ணையே அதிர
வைத்துக் கொண்டிருக்கும்
இந்த நேரத்தில் தங்கள்
வாழ்வையும், திறமையையும்
தேவராஜ்ய கட்டுமாணப்
பணிக்கு அர்ப்பணிக்க
இன்றே
ஜெபத்துடன் எங்களுக்கு
விண்ணப்பியுங்கள்.

**if you have already commited to serve God fulltime and if you have completed your Education This is the Right Time to Joined Us**

### ராஜ பிரதிநிதிகள்

### அர்ப்பணமுள்ள இளைஞர்கள்

**ஊழியத்திலுள்ள வாய்ப்புகள்**

- துடிப்புள்ள வட இந்திய மிஷனெரி
- வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்
- மருத்துவர்கள்
- செவிலியர்கள்
- சமுக சேவையாளர்கள்
- ஆசிரியர்கள்
- முன்னேற்ற பணியாளர்கள்
- வரவு செலவு கணக்குகள் பராமரித்தல்
- தட்டசாளர்கள்
- எழுத்தாளர்கள் (பத்திரிக்கை, மேலும் பல)
- தொழில்நுட்ப ஊழியர்கள்

## QUALIFICATION

Minimum : Hr. Sec. (+2) Passed & Above
Age : Below 23 (for Women)
: Below 30 (for Men & Married)
called to FullTime COMMITMENT



**TAKING YOUR LIFE TO THE NEXT LEVEL**

FMPB,FMPB YOUTH WING
No.29, High School Road, Ambattur, Chennai 53 Ph: 044-26570404,9841973060

குறிப்பு: பகுதி நேர ஊழியர்களாகவும் செயல்பட வாய்ப்புகள் உண்டு. (அதாவது சில ஆண்டுகள்)
மேலும் உங்களின் உதவிக்கு தொடர்பு கொள்ளுங்கள்